... 20.



# புததாத கணை ஸர்.

மதுரை ...

நிலைவேற் பிள்ளை ...

Madras

... 189...

உ

சிவமயம்.

கதிரை நாயகன் றுணை.

# புத்தமத கண்டனம்.

இஃது

ஆரணிநகர சமஸ்தான வித்துவானும்

மதுரை நான்காஞ் சங்கப் புலவரும்

மாயாவாத துவ்ம்ச கோளரியும் ஆகிய

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

## நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை

## சி. சண்முக முதலியாரால்

சென்னை ரூலோ,

கோல்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது ஞு சித்திரைமீ

1903 ஞு

Registered copy Right.

உ

சிவமயம்,

# முகவுரை.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

முன்னர்க் காலத்திலே ஸ்ரீமந்நாராயணர் மாயாமோகன் என்னும் பெயருடன் சென்று வேதாகம விரோதமான புத்தமதத்தை நூதனமாக உண்டாக்கினார். அசுரர்கள் அதனை யுண்மையெனக் கொண்டு அநுட்டித்து மடிந்தார். அதன்பின் அப்பௌத்தம் என்னும் கொடும் பேரிருள் உலகத்தை மூடத் தொடங்கிற்று. அன்னதின் மன்பதைகளகப்பட்டு அவலப்படாது கடைத்தேறி யுய்யும் பொருட்டு அநாதி மல முத்த பதியாகிய சிவபெருமானது திருவருளினாலே சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த பானுக்களாகிய, பரமாசாரிய சுவாமிகளாம் ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் முதலாயினோரும், அத்துவித வுண்மையுணர்ந்த மெய்கண்டதேவ நாயனார் முதலிய சந்தானாசாரிய சுவாமிகளும், சிவாக்கிர யோகிகள் முதலாம் ஐவர் உரைகாரரும், வைணவாசாரியர்களும், எப்பாடியங்களும் இப்பாடியத்திற் கிணையோவென் றிருமொழிகளுந் தெரிநல்லிசைப் புலவர் ஏத்தியிறும் பூதுற சிவஞானபோத மாபாஷியம் என்னுந் திராவிட மாபாடியத்தைச் செந்தமிழ்த் தெய்வத்திற் கீந்தருளிய புலவர் பெருமான் மாதவப் பெருந்தகைச் சிவஞான யோகியரும், ஏனையஆன்றோரும் பற்பல அத்தியற்புத திருவருட் செய்கைகளானும், வாதத்தானும், நூல்களானும், உரைகளானும், உபந்நியாசங்களானும் கண்டித்து ஒழித்தனர். அவற்றுண்மையானே அநேகர் சைவசித்தாந்தத்தை மேற் கொண்டார்.

புத்தமத கண்டனமாக எத்தனையோ நூல்கள் நம்முன்னோராற் செய்யப்பட்டுள்ளன. தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், ஆலாசிய மான்மியம், சங்கர சங்கிதை, உபதேசகாண்டம், சிவ ஞான சித்தியார் பரபக்கம், சங்கற்ப நிராகரணம், பரமத திமிரபானு, சித்தாந்த போதம், சிவார்க்கமணி தீபிகை, திராவிடமாபாடியம் முதலிய நூல்கள் இருந்தும் அவைகள் புத்தரது சொரூபலக்கணங்களை யெடுத்து மறுத்தமையானும், அவையுட் கருவிநூற் பயிற்சி யில்லார் உணர்தற்கு அரியனவா யிருத்தலானும், அவற்றை யுணராமல் தென்னிந்திய சாக்கியசங்கத்தாரும், கொழும்புத் தியசா

பிக்கூட்டத்தாரும் வாயில் வந்தவந்தவாறு சைவநிந்தைகள் புரிந்து, புத்தமார்க்க வினாவிடை, இரவு பகலற்ற வொளி, புத்தாகமபாலபோதக வினாவிடை, புத்தாகமப் பிரகடனம் என்னுந் தூஷண வழூஉச்சுவடிகளை வெளிப் படுத்தின மையால், புத்தமத தடத்த லக்கணங்களையெல்லாம் எடுத்து, அவர் நூல்களையும் வாக்கியங் களையுங் கொண்டே அவற்றை யெல்லா நிராகரித்து ஒழித்து, சைவ நிந்தைகளையு மொதுக்கிப் புத்தமத கண்டன மென்னும் பெயரோடு இந்நூல் செய்துவெளியிட்டாம்.

புத்தச் சுவடிகளைக் கண்ட போதே தொடங்கி யோரிரவில் இந்நூலை யெழுதி, இருதினத்துட் பதிப்பித்து முடித்தமையால்எழுதவேண்டியனவாயிருப்பன இரண்டாம் பாகமாகப் பின்னர் வெளிப்படுத்துவேம். அவற்றிற் புத்தமத சொரூப லக்கணங்களை யெல்லாம் எடுத்து மறுத்து அத்துவித சைவ சித்தாந்த உண்மை நாட்டப்படும். ஆயினும் இந்நூலை முதல் தொடங்கி முடிவு காறும் படித் துணர்வாராயின் புத்தமதப் பொய்களும், வஞ்சனையும், குற்றங்களும், இயை பின்மையும் நன்கு வெளிப்படும். புத்தமதக் கொள்கைகள் பலவும் நஞ்செந்தமிழ் மூந்து நூல் களிற்செறிந்து கிடப்பினும், அவற்றோடு வடமொழிக்கணுள்ள, தர்மபதம், போதிசத்துவாவ தான கல்பலதை, மத்யம நிகாயம், மகாபிநிஷ்கிரமண சூத்திரம், சப்தபோத்தியம், புத்ததார்மீகம் முதலியவைகளையும் ஆராய்ந்து எழுதினேம்.

இந்நூலை யெழுது மாறு வேண்டிய சிவநேயச் செல்வர்களுக்கும், அச்சிற் பதிப்பித்தநஞ் சைவசித்தாந்த சஞ்சீவினி சபையாருள் ஒருவரான ம-া-া-ஸ்ரீ சி. சண்முக முதலியாருக்கும், திருமயிலாப்பூரில் நிகழாநின்ற இவ்வருட மகோற்சவத்துள் ஒன்பாதா நாள் திருவிழாவா மின்று அரங்கேற்றுமாறு இருதினத்துள் சிரத்தையுடன் அச்சிட்டுக்கொடுத்த சென்னை யம்பதிக் கோள்டன் அச்சியந்திரசாலைத் தலைவர் ம-া-া-ஸ்ரீ டி. கோபால நாயகருக்கும், வைதிகமதத்தார்யாவரும் நன்றி கூறற் குரியரே. நமது நன்றி கூறலையும் இனிது நாட்டுகின்றேம்.

| | |
|---|---|
| சோபகிருது௵<br>சித்திரை௴ 28௳<br>ஞாயிற்றுக் கிழமை. | இங்ஙனம்,<br>**நா. கதிரைவேற் பிள்ளை.**<br>யாழ்ப்பாணம். |

சிவமயம்

திரிபுராந்தக பரமேசுவராயநம

# புத்தமத கண்டனம்.

காப்பு.

பித்தமத மென்றறிஞர் பேதித்துக் கண்டித்த
புத்தமதப் பொய்யிருளைப் போக்கவே—சித்தமத
ஞானந் தலைப்பெய்யு நால்வா யைங் கைக்களிற்றுக்
கானந் தலைக்கணியாங் காண்.

வழிபடு கடவுள் வணக்கம்.

வேதநெறி பற்றாத தயித்தியரைக் கடிந்தொருவின் னவனைக் காத்துப், பேதநெறி செல்லாமற் சித்தாந்த வுண்மையதிற் பிறங்கத் தன்றன், சாதநெறி தெரித்தாளிற் கொண்டருளி நந்தலத்திற் சார்ந்து வாழும், போதநெறி நின்றபுதுச்சந் திரநங் கந்தனடிபோற்றி யுய்வாம்.

எற்புடை யடியவர்.

புத்த கானக மழித்து மேனிலை பொருந்து நன்முடி புணர்த்தியவ்
வித்து மாநில மிருந்த பேர்பிடி விறப்ப வைசிர புரத்திறை
ரத்தர் பாதக மிகுத்த சாக்கிய ரயர்க்க முங்கைய தியற்றினோர்
சித்தி நூலினர் முதிர்ந்த மாபதி சிறக்க வெற்கரு ளுறுப்பரே.

புத்தநந்தி தலை யுருட்டிய சம்பந்த சரணாலயர்.

குத்திரம்பல் லவைகூறிக் கொதித்தெழுந்த புத்தநந்தி
சித்திரம்போ லியகாலைத் தேவாரத் தமிழ்வேதத்
தத்திரமஞ் செழுத்தென்றே யவன்றலையை யிடிப்பித்துத்
தத்திடச்செய் சம்பந்தன் சரணமக்குச் சரணன்றே.

புத்தமத வரலாறு.

" தென்னிந்திய சாக்கிய சங்கத்தாரும், கொழும்புத் தியசாபிக் கூட்டத்தாரும், புத்தமதம் கௌதம புத்தரால் உண்டாக்கப்பட்டது என்று வெளியிட்டனர். கௌதம புத்தர் என்பவர் இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்பிறந்தவர். அவர்க்குமுன்னராக எத்தனையோ புத்தர்கள் பிறந்து செத்தார்களென்றும், அவர்களும் கௌதம புத்தர் போலப் புத்தமதத்தைக் கைக்கொண்டு போதித்தார்களென்றும், பிரதம மகாசிருட்டி யாரம்பத்திலே செய்யப்ப

ட்ட புராண முதலிய நூல்கள் முழங்குகின்றன. ஆதலால் இப்புத்தமதம் கௌதம புத்தர் நூதனமாகக் கண்டுவெளிப்படுத்தியதெனப்படாது. ஆதிபுத்தனுடையகொள்கைகளையே அவரும் தெரிந்து வெளிப்படுத்தினா ரென்றுணர்க. புத்த மதத்தை முதலில் உண்டாக்கினவர் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யாகும். அவர் இப்பொய்ச் சமயத்தை யுண்டாக்கியதற்குக் காரணம் என்னையெனிற் சொல்வாம்.

தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி யென்னும் மூன்றசுரர்களும் பிரமனை நோக்கித் தவங் கிடந்தார். விதியோன் றோன்றிய காலத்து அழியாவரம் வேண்டு மென்றார். அவர் அசுரர்க்குக் கூறுவார் தைத்தியர்களே! அழியா வரத்தைக் கொடுக்கும் ஆற்றல் நமக்கு இல்லை. நாமும் இந்திரன் முதலிய தேவர்களும் யாவரும் அழிவேம்.. இறவாது என்றும் நித்தியமா யிருப்பவர் சிவபெருமா னொருவரே. ஆகலால் அப்பரம் பொருளன்றி யழியாவரத்தைக் கொடுப்பாரொருவரு மில்லை யென்றார். அசுரர்கள் மும்மதில்களாகிய பட்டினங்கள் வேண்டும். அவை யெங்குந் திரிந்து பகைவரைக் கோறல் வேண்டும். அவை ஆயிரம் வருடங்களுக்கு ஒருகாலொன்று சேரும்போதுஒருகணத்தே யோரம்பினாற்பரம சிவம் அழித்தாலன்றியழியா திருத்தலும் வேண்டும் என்றார். பிரமதேவர் அவ்வாறுதவிச் செல்ல, அசுரர்கள் இருந்து மூவுலகுந் தம்மடிப் படுத்தித் தேவர்களை யெல்லாம் வருத்துவாராயினர். தேவர்கள் யாவரும் மேருமலையிற் கூடி யோர் யாகஞ் செய்து பற்பல பூதங்களை யுண்டாக்கி அசுரர்மீது விடுத்தனர். அவைகள் ஆங்குச் சென்று அசுரர்கள் சிவபூசை செய்வதனால் அணுக முடியாது பழங்களையும் காய்களையுந் தின்றிருந்தன. அசுரர்கள் பார்த்து மண்கட்டியாலும் தடிகளாலும் எறிந்தடிக்க, அவற்று ளிறந்தன. இப்பூதங்களை யேவினோர் தேவர்களென்று அசுர ரறிந்து பின்னரும் வருத்தப்படுத்தினர். தேவர்கள் யாவரும் பசுபதியி னிடஞ் சென்று முறையிட்டார். பெருமானார் அவர்களைநோக்கி அசுரர்கள் நம்மிடத் தன்புடையராய்ப் பூசைபுரிதலால் யாம் அவரைக் கொல்லுகிலேம் என்றார்.

அதனை யுணர்ந்த தேவர்கள் அவரை வேதநெறி தவறிய பாசண்டராக்கின் மகாதேவரால் விரைவிற் கொல்லப்படுவார்க ளென்று தீர்மானிக்க, காத்தற் கடவுளாகிய எமது நாராயணப் பெருமாள் ஓர் உபாயஞ்செய்தார். நாரத முனிவனை யழைத்துத் தமக்குச் சீடராக வரும்படி உத்தரவு செய்து, தாம் மழுக்கிய தலையும், மயிற்றோகை யேந்தியகையும், சீவர வுரியும் உடையராய்ச் சென்று சிலரைஅருக

மதத்தா ராக்கியும், சிலரைப் புத்தமதத்தவ ராக்கியும் மயக்கிச் சிவ பூசையைக் கெடுத்தார். மாயாமோகன் என்னும் பெயருடன் சென்ற திருமால் தவம், பூசை, விரதம் இவைகளாற் பிரயோசன மில்லை யென்றும், வேள்வியால் யாதொரு பயனில்லை யென்றும், இந்த உல கம் பொய் என்றும், சூனியமாகிய இவ்வுலகத்தை நித்திய மென்னல் யுக்திக்கு விரோத மென்றும், இவ்வுலகம் விஞ்ஞான மயமென்றும் ஆன்மா, கடவுள் என்பன பொய் என்றும் பிறவுங் கூறி, இவற்றை யெல்லாம் இங்ஙனம் புத்யத, புத்யத என்றார். புத்யத புத்யத என்ற வற்றின் பொருள் என்னென்றால், அறிந்து கொள்ளுங்கள், அறிந்து கொள்ளுங்கள் என்பதாம். மாயாமோகன் என்னும் ஆசிரியர் கூறியசொற் களைக் கேட்டு அவர் வழிநின்றவரே புத்தர் எனப்படுவர். புத்யத, புத் யத என்று மாயாமோகன் சொன்னமையாற் புத்த குரு எனவும், ஆதி புத்தன் எனவும் வழங்கப்பட்டார். அசசொல்லின் வழிநின்றவரே புத்த சமயிகள் எனக் கூறப்படுவர். திருமாலின் அவதாரங்களுட் புத் த அவதாரமும் ஒன்று என்று பிங்கலந்தை, தத்துவத்திரயம், விஷ்ணுபு ராணம் என்பவற்றிலுங் கூறப் பட்டுள்ளன. இங்ஙனம் திருமால் அசுரா களின் கொடுமையை நீக்கி யவரை யழிப்பித்தற்கே வேதத்துக்கு விரோதமான இப்புத்த மார்க்கத்தை யுபதேசித்தா ரன்றி யுண்மையின ன்று. இவ்வாறே இந்திரனை யரசு செய்தற்காகப் பிருகற்பதி பகவா னாகிய தேவகுரு உலகாயதமதக் கொள்கைகளைப் போதித்தனர். சூ ரபன்மன் முதலாய அசுரர்களைத் தேவர்க்கு விரோதிகளாக்கி யவருட ன் வைரிகளா பொழுகுவிக்கும் கருத்தை யுள்ளே வைத்து, சுக்கிர னா கிய அசுரகுரு ஏகான்ம வாதமாகிய மாயாவாத மதத்தை யுபதேசித்த னர். உலோகாயத மதமும், மாயாவாத மதமும எக்காலத்து எவர்க்கு எத னிமித்தம யாரால் உபதேசிக்கப்பட்டன வென்று உற றுணராமற் பின்னோர், சிலர் அவைகளே மெய்ச்சமயங்க ளெனக் கொண்டார். அதுபோலவே திருமாலாகிய கடவுளும,

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்று திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறட் கருத்தின்படி, அசுரர் வேதவழி மறந்துபாசண்டராயின் அழிந்து விடுவர் என்றும், அதனால் தேவர்கள் யாவரும் சுகமுறுவார்க ளென்றும் எண்ணிச், செய்த இப்பொய்ம் மதத்தையும், எக்காலத்து எவரால் யாவர்க்கு எதன்பொருட்டுச் செய்யப் பட்டதென்று உணராமற் சிலர் உண்மை யென்று நம்பி யொழுகு கின்றனர். ஒழுகி வரினும அஃது உண்

மையாருமோ? ஆகாது ஆகாது. திருமால் இங்ஙனம் புத்த மதத்தை யுண்டாக்கினார் என்பது, விஷ்ணு புராணத்து மூன்றும் அம்சத்தில், சைன பௌத்த மதப் பிரவர்த்தனையிற் கூறப்பட்டுளது. கந்தபுராணத்தும் அவ்வாறு உரைக்கப்பட்டுளது. சங்கர சங்கிதையிலே சிவரகசிய கண்டத்தினோர் பிரிவாகிய உபதேச காண்டத்திலும், 70-71-72-அத்தியாயங்களில் இவ்விடயம் மிகவிரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

கூர்ம மகாபுராணம்-திரிபுரதகன முரைத்த அத்தியாயத்தும்,

சாக்கிய ருருவின் மாய னங்கவர் புரத்திற் சார்ந்து
கோக்களிற் றுரிவை போர்த்த கொன்றைவே ணியன்மே லன்பு
நீக்கிய வவுணர் தம்மை நிகழ்த்துபுன் சமயந் தன்னி
லாக்கிசல் லிலிங்க பூசை யறிவொடு மகற்றி னானே.

ஆங்கண்மா னுக்க ரோடு நாரத னனு கியன்பிற்
கோங்குறழ் முலையாள் பங்கன் பூசனை குறித்திடாமற்
நீங்கினைச் செய்யா னிற்குஞ் சமயத்திற் சென்றுநாளும்
வாங்குவில் லவுணர்நெஞ்ச மருண்டிட மாயைசெய்தான்.

என்று கழறப்பட்டது. இவற்றானே திரிபுர சங்கார காலத்திற்கு முன்னரே திருமாலினால் அசுரர் அழிவிற்காகச் சொல்லப்பட்டதென பதும், புத்த மதம் உண்டானகாலமோ வரையறுத்தல் கூடாதென்பதும், பொய்யாகக் கூறிய மதத்தை உண்மையென்று அசுரர்கள்நம்பி, தவம், வேள்வி, சாதி, ஆன்மா கடவுள் என்னும் இவ்வுண்மைகளை யெல்லாம் விட்டு, இறைசி முதலியன வுண்டு, மயிர்களைப் பறித்து, சுடுபாறையிற் கிடந்து, ஆடை யுடுக்காது நிர்வாணகோல மெடுத்து, மயிற்றோகை கொண்டு திரிந்துழன்றார் என்பதும், அதன் பின்னரே யங்ஙனம பற்பல புத்தர்கள் தோன்றி யிறந்தார் என்பதும், கௌதம புத்தரும் அவர் கொள்கைகளையே யுண்மையென்று தெரிந்து,அவ் வவல யார்க்கத்தைப் போதித்துச்செத்தார் என்பதும் பெறப்படுகின்றன. ஆகலால் புத்தமதாக்கம் கௌதம புத்தரால் நூதனமாகக் கண்டு தியானத்தால் உண்மை யெனக்கொண்டு செய்யப்பட்டதன்றாம்.

## புத்தமத வகை.

புத்தமதம் ஒருவழிப்பட்டதன்று, நால்வகைப்படும். அவையாவன யோகாசாரம்,மாத்தியமிகம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்பனவாம். ஆதிபுத்தனாகிய மாயாமோக புத்தர் அசுரர்கட்கு உபதேசிக்குங் காலத்து, அவருட் சிலர் உபதேச மொழிகளை யுண்மையென நம்பி மேல் வினை நிகழ்த்தாமல் இருந்தார். இவர் மாத்தியமிகர் எனப்படுவர். மாத்தியமிகர் என்பதன் பொருளாவது மத்திம யானுக்கர்

போலுந் தன்மையை யுடையவர் என்பதாம். இவர் உலகப் பொருள்கள் எல்லாம் உள்ளவுமல்ல, இல்லவுமல்ல, உள்ளவு மில்லவு மல்ல, எல்லாஞ் சூனியமே யென்பர்.

மாயா மோகனுன ஆதிபுத்தர் சொன்னவற்றை யுண்மையென்று புறப்பொருள் மாத்திரஞ் சூனிய மெனவொப்பி அதன்மேல் அறிவையுஞ் சூனியமென்று கொள்ளுதல் கூடாதன்றே என்று வினவினர். அவர் யோகாசாரர் எனப்படுவர். யோகம்—வினவுதல். ஆசாரம்—உடம்படுதல். புத்தர் சொன்னவற்றை யுண்மையென உடம்பட்டுப், பின்னரும் வினவினமையால் இப்பெயர் பெற்றனர். இவ்வகைப் புத்தர்கள் புறப்பொருள் மாத்திரம் சூனிய மென்று கொள்வோ ராவர். திருமாலாகிய ஆதிபுத்தர் புறச்சமுதாயம், அகச்சமுதாயம், அவித்தை, சம்ஸ்காரம், விஞ்ஞானம், கந்தம், நாமரூபம், ஷடாயதானம், பரிசம், வேதனை, திருட்டிணை, உபாதானம், பவம், பிறப்பு, பிணி, சந்தானம், தசசம்யோசனம், பஞ்சபலம், சப்த போத்தியங்கள், இருத்தி பாதங்கள், சம்மியக்கு பிரதானங்கள் என்பவற்றை யுணர்த்தி எல்லாம் அகச்சமுதாயம், புறச்சமுதாயங்களுள் அடங்குமென்று கூறத் தொடங்கவே, அசுரர்களாகிய மாணாக்கர்கள் கேட்டு, அவற்றை யுணர்த்துஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடியுமெனக் கேட்டனர். அவரே சௌத்திராந்திகர் எனப்படுவார். சூத்திரத்தின் அந்தம் (முடிவு) கேட்டமையால் சௌத்திராந்திகர் ஆயினர். இவர் புறத்திலே காணப்படும் பொருள்களெல்லாம் உண்மை யென்பது வழியளவைகளால் அறியப்படுமென்று கொள்வார்.

விட்டுணுவாகிய ஆதிபுத்தர் பிடக நூலென வொன்று காட்டி, திரிசரணம், பஞ்ச சீலம், அட்டாங்கமார்க்கம், மைத்திரீபாவனை, கருணா பாவனை, முதித பாவனை, அசுப பாவனை, உபேக்ஷாபாவனை என்னும் பஞ்சபாவனை, தசபாரமிதை, பதிபத்தினி யொழுக்கம், பிக்ஷுக்கள் ஒழுக்கம் அவிஞ்ஞை முதலிய சீலங்களை உபதேசித்து, உலகங்கள் பொய் என்றும், புறப் பொருள் அறிவாலறியப் படுமென்றுங்கூறவே, அவற்றை யொப்பாராய் மாறுகோள் சொன்னார். அதனால் அவர்கள் வைபாடிகர் எனப்பட்டார். விபாடையுடையவர் வைபாடிகர். விபாடையாவது—மாறுகோள் உரை. இவர் புறப்பொருள் காட்சிப் பொருளாமென்று கூறுவர். இவ்வாறு புத்தம் நால்வகைப்பட் டிருக்கவும் அவற்றை யெல்லாஞ் சங்கத்தார் மறைத்தது யாதுகாரணம்? நால்வகை வேறுபாடு உளவென்று காட்டின், தம்மதத்தில் நம்பிக்கை யில்லாது கழிக்கப்படும் என்றே விடுத்தனர் போலும். புத்தகத்துள் எல்லாம்

பொய் என்னும் மாத்தியமிகபுத்தம் உண்மையோ? புறத்திலேகாணப் படும் பொருள் பொய் என்னும் யோகாசார புத்தம் உண்மையோ? புறப் பொருள்கள் பொய்யல்ல உண்மையே.அவை வழியளவையான் அறியப்படும் என்று கொள்ளும் சௌத்திராந்திக புத்தம் உண்மை யோ? புறப்பொருள்கானற் சலம்போலத் தோற்றப்பொருளென்று கூறும் வைபாடிக புத்தம் உண்மையோ? எப்புத்த மதம் உண்மை யெனக் கேட்பின் என் கூறுவர்.எல்லாம் உண்மை யென்னனும் ஒவ் வாதே. ஆகலாற் புத்தமும் பித்தமதம் ஆக முடிந்த தென்க.

## கௌதம புத்தர் பிறந்ததின மறுப்பு.

புத்தகுரு வென்று கொள்ளும் கௌதம புத்தர் பிறந்தநாளில், தென்னிந்திய சாக்கிய சங்கத்தாரும, கொழும்புத தியசாபிக் சங்கத் தாரும் மாறுபடுகின்றனர். சாக்கிய சங்கத்தார் வெளிப்படுத்திய இரவு பகலற்றவொளி என்னும் சுவடியில் ,, சாக்கியமுனிவர் சரித்திரச் சுருக்கத் தில்'' கலியுகம் 1616௵ சித்தார்த்தி௵ வைகாசிமீ 13 நாள் ஆதி வாரம் பௌர்ணமிதிதி, கேட்டை நட்ாத்திரம் மீனலக்கினத்தில்,,பிற ந்தார் என்றும், தியசாபிக் கூட்டத்தார் வெளிப்படுத்திய ,,புத்தாகம பால போதகத்தில், "ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு வருட ங்களுக்குமுன் வைகாசிமீ பௌர்ணமி திதியிற் பிறந்தார் என்றும் காட்டப்பட்டுள்ளது. கலியுகம் 1616௵ ஆயின், இப்போது 3389 வருஷம் ஆகின்றன. இதுவுண்மையாயின் தியசாபிக் கூட்டத்தார் ஏற க்குறைய என்று பெய்ததும், 2500௵ என்றதும் மாறன்றோ? இவ ருள் யாவர் கூறுவது உண்மை? அன்றியும் கலியுகத்தில் 1616௵ சித்தார்த்தி௵ என்றதுதவறு. என்னை? 1616௵ துந்துபி௵ ஆகும். சித்தார்த்தி 1613௵ அன்றோ. இதனாற் சாக்கிய சங்கத்தார் மனம் எழுந்தவாறு எழுதிவிட்டாரெனபது நன்குதெரிகின்றது. இன் னதன்றிவேறுமொரு பொய் கூறியுள்ளார். என்னெனில் வைகாசிமா தத்திற் கேட்டை நட்சத்திரத்தில் ஞாயிற்றுக் கிழமையில், 13 தேதி யில் பிறந்தார் என்பது. இம்மொழிகளும் பொய்யாகின்றன. 1616ம் வருடம் சித்தார்ததி என்று எழுதியதுபோல இவையும், வாயில்வந்த படியெழுதினவாகும். வைகாசி மாதத்திற் பௌர்ணிமை விசாகநட்ச த்திரந் தோயாது வருதலில்லை. அங்ஙனம் வருமாயின் அப்பூர்ணிமை விசேடமெனப்படாது. ஆகவே கேட்டை நட்சத்திரம் என்றதும் பொ ய்யே. புத்த நூலாகிய மணிமேகலையிற் கௌதம புத்தர் பிறந்த தினத்தைச் சொல்லுங் காலத்து, "ஈரெண்ணூற்றொ டீரெட் டாண்டில்'' என்று கூறப்பட்டது. அதனைக் கலியுகம்1616 என்று கொள்ளற்கும் இடமின்று. 2816௵ எனறும் உரைக்கலாம்.இவையு

ண்மையாயின், ஈசான சகாப்தம் 67ம் வருஷத்தில் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மாயாதேவி கருப்பமுற்றாளென்று பர்மா தேசத்துப் பௌத்த நூல்கள் கூறுதற்கும், ஈசான் சகாப்தம் 68ம் வருடத்து வைகாசி மாதம் பூரணை விசாக நட்சத்திரங்கூடிய வெள்ளிக்கிழமையில் பிறந்தாரென்று தம்மபதமென்னும் புத்த நூலிற் கூறுதற்கும், தியசாபிக் கூட்டத்தார் 2500 வருஷம் என்றற்கும் கதியென்னை?

மணிமேகலையில்,

பெரியோன் பிறந்த பெற்றியைக் கேளாய்-யிருகிள வேனி லெரிகதிரிட
பம்-மொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்-மீனத்திடை நிலை மீனத்த
கவயிற்-போதி மாதவன்.

என்று உரைக்கப்பட்டது. "ஒருபதின் மேலுமொரு மூன்று, என்பது தேதியெனக் கூறப்படவில்லை. கேட்டை யென்றதுங் காணோம். விசாக மென்றே சிலர் உரைத்துளார். மீனலக்கினமுங் கொள்ளப் படவில்லை. மீனத்து அகவையின் என்றதன் பொருள் தெரியாது, மீனலக்கினம் என்று எழுதினர் போலும். இங்ஙனம் கௌதம புத்தர் பிறப்பைப் பற்றிப் புத்த நூல்கள் தலைதடுமாற்றமாக உரைத்தது போல இசசங்கத்தாரும் உரைத்தனர். அன்றியும் கௌதம புத்தர் தந்தை, இட்சுவாகு, வீரவாகு என்னும் அரசர் வமிசத்தைச் சேர்ந்த சுத்தோதயன் என்றார். அவ்வாறு ஓரரசன் அவ்வமிசத்திற் பிறந்ததாக எந்நூலிற் சொல்லப்பட்டன? நூல்களி னில்லாத விடயத்தைப் பொய்யாகப் படைத்துக் கூறலா புத்த தரும முறை. கௌதமர் தந்தை சாவக நாட்டு மண்முகனென்று, "தண்மணன் சாவகத் தவள மால்வரை மண்முகனென்னு மாமுனி,, என்று மணிமேகலை யென்னு நூலிற் கூறப்பட்டுளதே. அங்ஙனிருக்கவும் பரம்பரையாகச் சிவபக்தராக விளங்கும் இட்சுவாகு வமிசத்தான் என்றதும், வீரவாகு என்றொரு புதுப்பெயரை நுழைத்ததும் கலிகாலப் புதுமையே.

புத்தர்களே! இங்ஙனம் பொய்களை வரைந்ததை, நும் புத்தன் கூறிய பஞ்ச சீலத்துள், நான்காவது சீலமாகிய "பொய் சொல்வதில்லையென்று வாக்குத்தத்தம் பண்ணுகிறேன் (முசாவாதா வேரமணி சிக்காபதஞ் சமாதியாமி) என்ற ஒழுக்கத்திற்கு மாறன்றோ?

## பிரதம மந்திர மறுப்பு.

புத்தர்கள் திரிசரணத்தையும் பஞ்ச சீலமந்திரங்களையும் உச்சரிப்பதற்கு முன்னர் "நமோ தஸஸ பகவதோ அரஹதோசம்போ சம்புத்தச்ச," என்னும் மகாமந்திரத்தை உச்சரிக்க வேண்டுமென்பது அவர் விதியாகும். இதனாலே புத்தகடவுளுக்கு மேலே வேறோர் கட

வுள் உண்டென்பது வெளியாகின்றது. புத்தனே கடவுளெனக் கொண்டிருப்பராயின் "புத்தம் சரணங் கச்சாமி" நமோபுத்தாய' என்ற மந்திரங்கள் பின்னர்ச் சொல்ல வேண்டாம். இதுவொன்றே போதும். புத்தாஞ்சரணம் கச்சாமி, என்று திரிசரணத்துள் ஒன்றைக் கூறுவோர்,முதலில் இது கூறுதற்குக் காரணம் என்னை? இம்மந்திரத் துள் பகவன், அரன், சம்பு எனனும் பெயர்கள், புத்தர் பெயர்களுட் காணப்படாமையால் அப்பெயர்கள் எமது பரமபதியாகிய சிவபெரு மானையே குறிக்க நிற்கும் என்க. அவரே புத்தருக்கு மேலான கட வுள் என்பது குறிக்கின்றது.அதுபற்றியே இருபத்து நான்கு தீர்த் தங்கரருள் ருஷப தீர்த்தங்கரர் முதல்வா எனப் புத்தநூல்களுமகூறின. பகவன் என்ற பெயர் புத்த நூல்களிற புத்தர்க்குச சொல்லப்படி னும், அரன், சம்பு என்னும் பதங்கள் அவர்க்குச் சொல்லப்படவில்லை யே. சிவபெருமானுக்கே சிறப்புப் பெயர்களாக விருத்தல் வேதசிவா கம புராணாதிகளிற் கூறப்பட்ட சுலோகங்களாற் பெறப்படுகின்றது.

அரன் என்னும் நாமமும், சம்பு என்னும் பெயரும் புத்தர் க்கே உரியன வெனில், இடுகுறியா? காரணக்குறியா? இவர் ஒரு காலத்தே பிறந்தும் இறந்தும போதலால், அப்பெயர்கள் அவர்க்கு இடுகுறியாகா. காரணமாயின் என்ன காரணத்தால் நேர்ந்தன? அரன் என்னும் சொற்கு அழிப்பவன் என்பது பொருள். அழித்தல் என் னுந் தொழில புத்தர்க்கு விரோதமான தாதலின் அதனை யுடையவர் என்று சொல்லுதலும பொருந்தாது. இந்திரியத்தை வென்றார், குற் றங்களை அழித்தார எனில், அவற்றை யழித்தார் பலருண்டாகலானும் அவர்க்கும் அப்பெயர சொல்லப் படவேண்டு மாகலானும் புத்தரொ ருவர்க்கே செல்லாது. ஆதலால் எல்லாப் பொருள்களையும் அழித் தொடுக்கும் சிவபெருமான் ஒருவர்க்கே செல்லுமன்றி யொவ் வொன்றனை யழிப்பவர் போலுள்ள புத்தர்க்குச் செல்லாதென்க. அன்றியும் உலகப்பொருள்க ளெல்லாம் பொய் எனபதும், அநித்தி யம் என்பதும் புத்தர் கொள்கை யாகலின், இந்திரியமும், குற்றங்க ளும் இல்லாத பொருள்களன்றோ? இல்லாத பொருள்களாகிய அவற் றைப் புத்தர் அழித்தார் என்பது, மலடிமகனைக் கொன்றது மானும். புத்தர் இறந்தது சொல்லப்படுதலால், அவரையு மழித்தவனே அர னெனப்படுவன். சம்பு என்பது அநாதியே உள்ளவன் எனப்பொருள் படும். எனவே எக்காலத்து முள்ளவன் என்பதாம். புத்தர் பிறந்து, ஈசான சகாப்தம் 148 - வருடத்தில் வைகாசிமாதத்தில், குசீ என்னும் நகரத்திலே இரணியவதி என்னும் ஆற்றின் கரையிலே இரட்டைச் சால மரத்தின் நடுவிலே ஆனந்தனைக் கொண்டு பாய் விரிப்பித்து,

வடக்கே தலைவைத்து வலக்கையைத் தலையணையாகக் கொண்டு, மேற்றிசைநோக்கி வலப்புறமாகச் சரிந்து படுத்துக் காலைக் கால்மேல் வைத்துச் செத்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலாற் பிறந்து சில காலம் இருந்து இறந்த ஒருவரைச் சம்பு என்றல் கூடாது. அதுமயிர் சிறிது மில்லாளைக் கூந்தலழகி யென்று சொல்வது போலாம். அன்றியும் அவர்போலப் பிறந்திருக்கும் மற்றைய உயிர்களுக்கும் சம்பு என்று சொல்லவரும். அவ்வாறாயின் புத்த சங்கத்துச்சேர்ந்த ஒவ்வொரு பிட்சுக்களுக்கும், பிறந்திறக்கும் மற்றையோர்க்கும் வருமே. இம்மந்திரத்தைச் சொல்லும் ஒவ்வொருவரும் சம்பு ஆய் இருக்கும் போது வேறு எந்தச் சம்புப்புத்தரை வணங்குவது. ஆகலால் புத்தமத மந்திரங்களுட் சிறந்த இதனாலே புத்தர்க்கும் மேலான கடவுள் ஒருவர் உண்டென்பதும், அவர் அரன் சம்பு என்னுந் திருநாமங்களை யுடையவர் என்பதும், அவர் *சிவபெருமான் என்பதும் பெறப்பட, கடவுள் இல்லை யென்றும், ஆன்மா இல்லை யென்றும், எல்லாம் அநித்தியமென்றும் கூறுதல் நியாய மாகுமா?

இந்த மந்திரத்தின் கதியிவ்வாறாகத் திரிசரணமந்திரங்களையும் ஆராய்வாம்.

## திரிசரண மறுப்பு.

முன்னர்க் கூறிய மந்திரத்தைக் கூறிய பின்னர், புத்தர்கள்

புத்தம் சரணங் கச்சாமி.
தர்மம் சரணங் கச்சாமி.
சங்கஞ் சரணங் கச்சாமி.

* [illegible] டாக்டர்
ஜி. சாமிநாதையர் நூல் நி
அடையாளம் சேனை.20.

என்று மந்திரங்களை மூன்று முறைகூறுவர். இவற்றிற்குமுறையே புத்த சுவாமியைச் சரணமாக அடைகிறேன். அவர் கூறிய தருமங்களைச் சரணமாக அடைகின்றேன். சங்கத்தைச் சரணமாக அடைகின்றேன் என்பது பொருளாம். முந்தின அரகதோ சம்போ சம்புத்தச்ச, என்ற மந்திரத்தால் புத்தரைச் சரணமாக அடைகின்றேன் என்பது பொருளாகவும், பின்னரும் இம்மந்திரத்தை வைத்தமை கூறியது கூறல் என்னுங் குற்ற மாகும். புத்தர் செத்துப் புல்முளைத்துப் போகவும், அவரைச் சரணமாக அடைகின்றேன் என்று பலமுறை கூவினாலும் அதனை யறிந்து பலனைக் கொடுப்பவர் யாவர்.? பஞ்சகந்தங்களும் இருந்தாலன்றோ அறிதற்குக் கூடும். அவை யறக்கெடுவதே முத்தி யென்று கூறலால், புத்தரும் பஞ்சகந்தமு மறக் கெட்டு முத்தி யடைந்திருப்பாராயின், தமது சரண மந்திரத்தைக் கேட்டுப் பலனளித்தல் கூடாதன்றே. அங்ஙன முண்டாயின் அவர்க்குப்பஞ்

சகந்தங்களும் அறக் கெடவில்லையென்றும் அவர் முத்தியடைய வில்லையென்றும் ஏற்படும். ஏற்படின் புத்தர் பந்தத்திற் சிக்கினவ ராவரன்றிச்சுவாமியாகார். இறந்தபின்னர்ப் புத்தர் இல்லை யென்பதே புத்தர் கொள்கை. புத்தர் இறந்தொழிந்தபின் இருக்கின்றாரோ? இல்லையோ? என்பது இன்னும் புத்தசமயிகளுக்குச் சந்தேகம். கௌதம புத்தரிடம் உபதேசம் பெற்றுச் சங்கத்திற் சேர்க்கப்பட்ட க்ஷேமை என்னும் பிட்சுணிப் பெண்ணை, கோசல தேசத்து அரசனாகிய பிரசேனசித் என்னும் அரசன் விளித்து, அம்மே!

ததாகதன் என்னும் புத்தன் இறந்த பின்னும் உளனோ? என வினவினன். அதற்கு அவள், இறந்த பின்னரும் இருப்பதாக ஆசாரிய புத்தன் கூறிற்றில னென்றாள். அரசன், ஆனால் இறந்த பின் புத்தன் இல்லையோ என்றான். க்ஷேமை கூறியதாவது - அவ்வாறும்ஆசாரிப்புத்தன் கூறிற்றிலன் என்பதாம். அதுகேட்ட அரசன், புத்தன் இறந்த பின்பும் உள்ளவனாகவும் இல்லோனாகவும் இருக்குமோ என்றான். அவள், அவ்வாறுங் கூறவில்லையே யென்றாளாம். இவ்வாறு சம்யுத்தநிகாயம் என்னும் பௌத்த நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே கௌதம புத்தர் இருக்கின்றாரோ? இல்லையோ என்பது சந்தேகம். அங்ஙன மிருக்கவும் புத்தனைச் சரணயாக அடைகின்றேன். வழிகாட்டியாகத்துணைக் கொள்ளுகிறேன்என்று பொருள்படும் இம்மந்திரத்தைச் சொல்வது இவர் கொள்கைக்கு முற்றும் விரோதமே. புத்தன் இருக்கின்றா னென்று கொண்டே சரண மடைகின்றே மெனச் சொல்கின்றாரன்றி, அவன் இல்லை யென்றாற் சொல்வார்களா? சொன்னாலும் பிரயோசனம் இல்லையே. இல்லாத தொன்றைக் குறித்து மாரடித்து அழுவது,“செத்த பிணத்தைப் புலம்பிப் போற்றி யுலகத்தை ஆளவரம் கொடுக்குமாறு கேட்டல் போலாம். தர்மம் என்பன சடமாயிருத்தலின் அதனைச்சரண்புகல் மண்குதிரையை நம்பி யாறுகடக்கத் துணிவது போலாம். சங்கத்தைச் சார்ந்தவர்களும் புத்தர்போலப் பரிநிருவாண மடைதலாகிய துன்பத்திற்கு ஆளாகிச் செத்தவிடமுந் தெரியாது புன்முளைத்துப் போனாராதலால் அவர்க்குச் சரண மாகின்றேம்! அவரைத்துணைக் கொள்கின்றேம் என்பதும் வாளாமுடிந்தது.

இனி, புத்தம் சரணங் கச்சாமி,, என்றபோது, எந்தப்புத்தனைச் சரணமாக அடைதல். புத்தசுவாமிகள் ஒருவரல்லரே. பலரன்றோ? கௌதம புத்தர் போலத் தருமங் குறைந்த காலத்து ஒவ்வொருவர் புத்தகுரு ஆகத் தோன்றுவர் என்று புத்தசாதக கதை என்னும் நூலாற் றெரிகின்றதே. கௌதம புத்தர்க்கு முன்னர் அவர் போலப்

பிறந்து செத்தவர் அநேகர். அவருள் இருபத்தேழு புத்தர் பெயரைமாத் திரங் காட்டுகின்றேம். அவை வருமாறு:—

1 தண்ணகரர்.
2 மேதங்கரர்.
3 சரணங்கரர்.
4 தீபங்கரர்.
5 கௌண்டின்னியர்.
6 மங்களர்.
7 சுமங்களர்.
8 இரேவதர்.
9 சோபிதர்.
10 அநோமதர்சி.
11 பதுமா.
12 நாரதர்.
13 பதுமோத்தரர்.
14 சுமேதர்.
15 சுசாதர்.
16 பிரியதர்சி.
17 அர்த்தர்சி.
18 தர்மதர்சி.
19 சித்தார்த்தர்
20 திஷ்யர்.
21 புஷ்யர்.
22 விபச்சித்.
23 சிகி.
24 விருஷபர்.
25 ககுந்தர்.
26 கோபகாமர்.
27 காசிபர்.
28 கௌதமர்

இருபத்தெட்டாவது புத்தர் ஆகிய கௌதம புத்தர் போல மற்றை இருபத்தெழுவரும் புத்தசுவாமிகளாகப் பிறந்தவர் என்று பௌத்த நூல்கள் கூறவும், கௌதம புத்தரை வியந்தெழுதி மற்றையோரைச் சங்கத்தார் விடுத்தது † தசசம்மியோசனங்களுள் விசிகிற்சை, ஔத்தத்தியம், அஞ்ஞானம் என்பவற்றின் பாற்படும் என்க. மற்றைய புத்தர் பிறந்த இடம், காலம், தாய்தந்தையர்பெயர் முதலிய தெரியவில்லைப் போலும். நிற்க, இவருள் எந்தப்புத்தரைவழிகாட்டியாகப் புத்தர் கொள்கின்றார். கௌதமரை யாயின் மற்றையோரைக் கொள்ளாமைக்குக் காரண மென்னை? அவரும் இவர் போன்றவர்தாமே? அவர் வழிகாட்டிகளாயின் கௌதமபுத்தர் தமக்கு வழிகாட்டியில்லையென்று அலைந்து வருந்தினரே. குதிரை யொன்றும், சந்தகன் என்னுங் குதிரைக் காரனுமே அவர்க்கு வழிகாட்டின ரென்று திரிபிடகத்தில் மகாபிநிஷ்கிரமணசூத்திரம் என்னும் புத்தநூலிற் கூறப்பட்டிருக்கிறது. அவர்க்கு முன்னர்த் தோன்றிய புத்தர்க ளாவது, அவர் போ

† தசசம்மியோசனங்களை மனோபாவம் பத்து என்பர். அவையாவன சத்காயதிருஷ்டி, விசிகிற்சை, சீலவிரதம், காமம், பிரதிகை, ரூபராகம், அரூபராகம் மானம், ஔத்தத்தியம், அஞ்ஞானம் என்பன. இவை சீலசமாதிகளுக்குவிரோதமானவை யாகலின் விடுதல் வேண்டு மென்பது தார்மிக சூத்திர முதலிய புத்த நூல்களின் கொள்கை.

தனைசெய்த தருமங்களாவது, சங்கத்தவர்களாவது வழிகாட்டவில்லை. அவர்க்குக் காட்டாத புத்தர்களும் தருமங்களும் சங்கத்துப் பிட்சுக ளும் இப்போதிருக்கு மவர்க்கும் வழிகாட்டுவாரென்பது இலவுகாத்த கிளிபோலவும், கானலை நீரென்று வாளா நாவுலர்ந்தயருமொருவன் நேரவு மாகு மென்க.

புத்தர்களின் குருவாகிய கௌதம புத்தர்க்கு வழிகாட்டிப் பெ ருந்துறவிற்கு ஏதுவாக்கியன பிணியாள னுடம்பும், விருத்தன் றேகமும் செத்த பிணமொன்றும் என்று புத்த சரித்திரத்திற் கூறப்பட்டுள. ஆதலால் இவைகளை விடுத்து,

> நோயுள்ள உடம்பைச் சரணமாக அடைகின்றேன்.
> கிழத் தேகத்தைச் சரணமாக அடைகிறேன்.
> செத்த பிணத்தைச் சரணமாக அடைகிறேன். அல்லது வழிகாட்டி யாகக் கொள்கின்றேன் என்னும் பொருள்பட,
> ரோக தேகம் சரணங் கச்சாமி.
> விர்த்தாங்கம் சரணங் கச்சாமி.
> பிரேதாங்கம் சரணங் கச்சாமி.

என்று திரிசரண மந்திரங்களையும் வைத்தலன்றோ நியாயமாகும், முதன் முதல் வந்து பிறந்த புத்தர் தமக்கு எந்தப் புத்தரையும், யார் போதித்த தருமங்களையும், எந்தச் சங்கத்தாரையும் சரணடைந்தார். அல்லது வழிகாட்டியாகக் கொண்டு சென்றார். மூன்றனுள் ஒன்றனை யாவது கொண்டிலரே. கொண்டாராயின் அவர்க்கு முன்னரும் வே றோர் புத்தரும் தருமங்களும், சங்கங்களும் இருக்கவேண்டும். அங்ஙு னம் ததாகதர் கொள்ளாமையால் இவை பிரயோசன மில்லையாகி, புத் தமதக் கொள்கைக்கே வேர்ப்புழுவாக நின்றமை காண்க.

## திரிசரணத் தடுமாற்றம்.

குளிக்கப் போய்ச் சேறுபூசிக் கொள்வார் போல, புத்தகடவுளு டைய நன்மையைப் பெறுவதற்கு விரும்பி, அவர்க்கு மாறான செய் கைகளைத் தென்னிந்திய சாக்கிய சங்கத்தாரும், கொழும்புத் திசாய பிக், என்ற புத்த கூட்டத்தாரும் செய்தமை விசனிக்கத் தக்கதே. என்னெனில், கௌதம புத்தர் பெருந் துறவியாகி, காசியபன், ஆனந் தன், சாரீ புத்திரன், மௌத் கல்யாயனன், அநுருத்தன், சுபூதி, பூர ணன், காத்தியாயனன், உபாலி, இராகுலன் என்னும் சீடர் பதின்ம ரோடு பிச்சை யெடுத்துத் திரிந்து வேணுவனத்தினின்றும் கபில வா ஸ்துவாகிய தம்மூர்க்கு வரும் வழியில் பிரபாச தேசத்தா னாகிய வைடூ ரியன் என்பவன் வந்து பணிந்தான். அவனை நல்வழிப் படுத்தக் கரு

திய சினர், அரசமரத்தி லிருந்து கடைந்தெடுத்த நூற்றெட்டுள்ள மணிகள் கொண்டு, நமோ புத்தாய, நமோ தர்மாய, நமச்சங்காய என்னும் மந்திரங்களை இரண்டிலக்கம் தரம் செபிக்கும் படியும், அதனால் வரும்பயனையும் உபதேசித்துச் சென்றாராம். அங்ஙனமே பலர்க்கும் உபதேசித் தார் என்று புத்தநூல்கள் கூறுகின்றன. அம் மும்மணிகளின் பொருள் என்னெனில், புத்தனுக்கு நமஸ்காரம், தர்மத்துக்கு நமஸ்காரம், சங்கத்துக்கு நமஸ்காரம் என்பனவாம். இங்ஙனம் பௌத்த புத்தராற் சொல்லப்பட்ட மந்திரங்கள், குலத்தை வெட்டுங் கோடரிக் காம்புபோல இருப்பது கண்டு தலைதடுமாற்றஞ் செய்து விட்டனர். நமோபுத்தாய, நமோதர்மாய, நமச்சங்காய என்றதை, ஷை சங்கத்தாரும் கூட்டத்தாரும் மாற்றஞ் செய்து கொண்டனர். புத்த குரு விதித்த மந்திரங்களை விடுத்து, தாங்கள்

(நமோபுத்தாய என்பதனை) புத்தாஞ் சரணங் கச்சாமி.
(நமோ தர்மாய என்பதனை) தர்மாஞ் சரணங் கச்சாமி.
(நமச்சங்காயஎன்பதனை) சங்காஞ் சரணங்கச்சாமிஎன்றுவைத்துக்கொண்டார்

இவர்களைப் பார்க்கினும் குருத்துரோகிகள் யாவர்? புத்த குரு, இங்ஙனம் தமது சீடர்கள் பின்னர் மாற்றஞ் செய்வரென்று எண்ணாமல் விதித்தமையால் பயனில்செய்தலாகிய குற்றத்தையும், வருங்கால சம்பவம் அறியாத் தோடத்தையும் அடைவர் அன்றோ? இவ்வாறு புத்த மதமும் மற்றைய மதங்கள் போலவும், பாடைகள் போலவும் நாளுக்கு நாள் திருத்தப்பட்டு மாறிவரும் மாறுமதமாகும். இப்புத்த மதத்தை உண்மையென்று நம்பி அநேகர் வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிகின்றார். அந்தோ! என்ஞான்றும் இருந்தவா றிருக்கும் மதம் எமது சைவசித்தாந்தமே. மொழி அமிழ்தினு மினிய தமிழ் மொழியே. இவற்றை விடுத்து இவ்வலைமதங்களிற் பிரவேசிப்போர் கையின்கணுள்ள சங்கநிதி பதுமநிதிகளை யெறிந்து விட்டு, அரிப்பரித்துத் தேடும் அவர்கட்கு ஒப்பாவரென்க.

## பஞ்சசீல மறுப்பு.

திரிசரணங்கள் கூறியதன் பின், பஞ்சசில மந்திரங்களைச் சொல்லவேண்டுமாம். பஞ்ச சீலமந்திர கற்பனைகளாவன—

1 பாணாதி பாதா வேரமணி சிக்காப் பதஞ் சாமாதியாமி
(எவ்வித சீவர்களையுங் கொலைசெய்வ தில்லையென்றுசத்தியஞ்செய்கின்றேன்)

2 அதின்னா தாணா வேரமணி சிக்காப்பதஞ் சாமாதியாமி.
(பிறர்பொருளைக் களவாடல் செய்யேனென்று சத்தியஞ் செய்கின்றேன்)

3 காயேசு மிச்சா சாரு வேரமணி சிக்காப்பதஞ் சாமாதியாமி.
(காமாசை கொள்ளேனெனப் பிரதிக்கினை செய்கின்றேன்)

4 மூசாவாதா வேரமணி சிக்காப்பதஞ் சாமாதியாமி
(பொய் சொல்லே னென்று வாக்குப் பண்ணுகிறேன்)

5 சுராமேறய மச்சா மாதட்டாறு வேரமணிசிக்காப்பதஞ் சாமாதியாமி
(மதுபானஞ் செய்யேனென்று சத்தியஞ் செய்கின்றேன்.)

இவைகளே பஞ்ச சீலங்களாகும். இவற்றை யொவ்வொருபுத்தனும் கைக்கொள்ள வேண்டுமாம். இவை புத்தசுவாமியாலே போதிக்கப்பட்டதென்பர். போதித்த சுவாமியே இவைகளை மீறிப் பாவஞ்செய்திருக்கின்றார். "யதாகுரவே ததாசிட" (ஆசிரியரெப்படி யடைந்தோனுமப்படி,) என்றபடி கௌதமபுத்தரே யிவற்றை மீறிச்செய்தும் பரிநிருவாண மென்னும் முத்தியை யடைந்து, பின்னுள்ளோரான் மதித்துப் பூசிக்கப்படுவாராயின் மற்றையோர் மீறுவதனால் வரும்இழிவென்னை ? எல்லாஞ் சூனியமென்ற இவர்க்கு இவ்வைந்தும் மெய்யாய் விளங்குவது வியப்பினும் வியப்பே. கொலைசெய்யேன் என்ற வசனத்தாலே, கொல்வோனாகிய தானும், கொல்லப்படும் பொருளும் கொல்லுதல் ஆகிய தொழிலும், கொல்லுதற்கு முன்னும் பின்னும் நிகழும் வினைகளும், கொல்லுதற்கும் கொல்லப் படுதற்கும் ஏதுக்களும், கொல்லுங் கருவிகளும், அவை நிகழும் இடமும் காலமும் பயனும் முதலிய இவைகளெல்லாம் உண்மையென்று பெறப்படும். அங்ஙனே மற்றவைகள் நான்கற்கும் இவை பெறப்பட்டு உள்பொருளாகும். அவ்வாறாகவும் உலகப்பொருள்களெல்லாம் (சூனியம்) இல்பொருள்கள் என்று புத்தசுவாமி போதித்தது உண்மையாகுமா? இவைகளெல்லாம் சூனியமாயின் இம்மந்திர சீலங்களும், இவையிற்றால் வரும் பலாபலங்களும் சூனியமாகுமே. இல் பொருளாயின் பயனில் கூறலாகிய பெரும் பாவத்திற்கு ஆளாவார் என்க.

கௌதம புத்தர் முதலாவது சீலத்தை மீறியது.

முதலாவது சீலம் என்ன வெனில் எந்த உயிரையாவது கொல்லுதல் கூடாதென்பது. கௌதம புத்தர் தமது தாயாகிய, கோலிய தேசத்தரசனும் அஞ்சனன்மகளான மாயாதேவி வயிற்றிற்பத்துமாதமுங்குடியிருந்து, தாயுணவைத் தாமும் உண்டு, பிறக்கும் போது அவளது வலப்பக்கத்து வயிற்றைக் கிழித்துக் கொண்டு பிறந்தனர். இவ்வாறே புத்த நூல்களாகிய நீலகேசித் தெருட்டு, நீலகேசித்தெருட்டுரை உலோக வசனம், விம்பசாரகதை முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு தாயைக் கிழித்துப் பிறந்து சாவச் செய்வது கௌதமர்க் கன்றி, அவரைப் போலப் பிறந்த எல்லாப் புத்தர் களுக்கும் வழக்கமாம். ஐயகோ! புத்த சுவாமிகள் எல்லாம் தாயைக் கொல் லும் மாபாதகராயினர். தாயைக் கொன்று பயிரைப்பிடுங்கலால் இவ ரைத்தான் உலகர் " தாயைக் கொல்லி மொட்டையர்,, என்றுவழங் கிப் பழித்தருசுவர். இவர் செய்கை கண்டு இரங்கியோ " கொச்சை மக்களைப் பெறுதலினக்குடி யெச்சமற் றேமாந் திருத்தனன்றே," என்று ஆன்றோரும் கூறினர். இத்தாயைக் கொல்லி மொட்டையர்க ளான புத்தர்கள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு பிறக்க, தாய்மார் கள் ஆறு நாட்குற்றுயிருடன் கிடந்து ஏழாநாள் இறப்பார்களாம். அதனைப் புத்தநூல் கொண்டே நிறுவுகின்றாம்.

### விம்ப சாரகதை.

உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வந்தோ யுறாம
லான்றே னவழித் தோன்றின ஞதலி
னீன்றோ ளேழாநா ளின்னுயிர் வதைத்தான்.

### புத்தர் சித்தாந்தத் தொகை.

முத்தராம் புத்தர் தோன்றித் தாய்பழுவை முறித்தே விட்டார்
கொத்துவாழ் குழலா ளாகுங் குண்டல கேசிதானுங்
கத்திருவுங் கணவனைக் காட்டினையுங் கொன்றிட்டா
ரித்துணையா ரிருவரும் வந்திங்ஙனே தவ முறைப்பர்.

### நீலகேசித் தெருட்டு-குண்டலகேசி வாதச்சருக்கம்

"இவன் பிறக்கின்ற காலத்து மாதாவினது வலமருங்குலாற் பிறந்தான். அவளும் ஆறுநாட் குற்றுயிரோடு கிடந்து ஏழாநாள் இறந்தாள். இது புத்த மாதாக்கள் யாவருக்கும் ஒக்கும்" என்பதாம்.

உலகத்துள்ள தாய் தந்தையர்கள் ஒரு மகவீன் றெடுப்பப் பண்ணாத தவமெல்லாஞ் செய்வர். புத்திரோற்பத்தி கண்டபோதே அளவிலா வின்புறுவர். பின்னர் இகத்தும் பரத்தும் அவராற் சுகம பெறுவார். அந்தோ! புத்தன் றுபார்க்கு இவ்வியல்பு மாறினவோ! என்னபாவம். எவ்வகை யுயிர்களும் தாய்மாட்டு வைக்கும் அன்பு சொல்லுந் தரத்ததோ? முற்றத்துறந்த சிவஞானப் பெருஞ் செல்வராகிய பட்டினத்து அடிகளாரு மன்றோ தாயின்விருப்பை முடிக்கற்குப் பன்னாட்காத் திருந்தார். மலைகலங்கினும் கடல்கலங்கினும், சூரிய சந்திரர் நிலைபெயரினும் தம்முளங் கலங்கித் திரிவுறா தவர் கலங்கித் திரிந்தனரே. தெய்வப் புலமை ஒளவைப் பிராட்டியும் திருவள்ளுவ நாயனாரும் பிதா மாதா

வைப் பேணுந் தொழிலே சிறந்த தென்று "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனவும், "ஆதிபகவன் முதற்றே" எனவும் அருளியுள்ளாரே. அதினும், பிதாவைப் பார்க்கினும் மாதாவே சிறந்தாள் என்பது துணிபாக "அன்னையும்" ஆதி,, என முதலில் வைத்து ஓதினரே. மனு ஸ்மிருதியில் உபாத்தியாயனில் ஆசாரியனும், அவனில் தகப்பனும், அவனில் தாயும் சிறந்தவள் என்றமை காண்க. இங்ஙனம் ஓதியதும் போதாமல் "தந்தை தாயபேண்" தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை "என்றனர் ஔவையார்" நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக் கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்" என்றதிற் புத்த தாய்மாரைக் கூறிற்றிலரே. தாயைக் கொல்லும் மாபாதகம் புத்தர்களுக்கன்றி மற்றைய மானுடர்க்கின்மையின் சிறுவரைவு கொண்டு, இனம்பற்றிக் கொள்வான் விட்டனர் போலும், ஆயினும், புத்த நூலாகிய நீலகேசித் தெருட்டு உரையிலே காட்டப்பட்ட,

சுலோக வசனம் என்னு நூலில்,

புத்தன்றாய் நண்டிப்பி வாழை புனமூங்கில்
கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி-யித்தனையும்
வேலாலும் வாளாலு மன்றியே தாங்கொண்ட
சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு.

என, புத்தர் தாய்மாரையுஞ் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே இப்புத்தக் குருமார்கள் பிறப்பும் நண்டு, இப்பி, வாழை, மூங்கில், விரியன், பாம்பு, சிலந்தி என்னுமிவற்றினின்றுதோன்றுந் தாயைக் கெடுக்கும் கொடும் பிறவிகள்போல; குடியிருந்தவீட்டுக்குக் கொள்ளிவைக்கும் உயிர்ப் பிறவிகள் போலவும், உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யும் கொடுஞ்சனங்களைவும்இழிந்த பிறவியேயாம் என்று ஆன்றோர் சொல்லுவதற்கு நாணுர். ஓரறிவுடைய புல்லுருவிகளும் (குருவிச்சை) தாந்தோன்றி வளர்தற்கிடமாய தாய் மரத்தை வளர்ந்து வளர்ந்து இரக்க மின்றிக் கிழித்து வேரோடிக் கொல்லா நிற்கும். புத்த சுவாமிகள் என்று சொல்லப் பட்டவரோ தோன்றும் போதே கிழித்துக் கொல்வதுமோர் ஆச்சரியமே. தாயாரிடத்தில் இரங்காத நெஞ்சம் மற்றையோரிடத்தில் இரங்குவது எப்படி? பிரமக்கொலை, சிசுக்கொலை, பசுக்கொலை, பெண்கொலை யென்னும் இவற்றில் தாய்க்கொலையே மகாபாதகமாம். இங்ஙனந் தாயைக் கொலைசெய்து தோன்றும் புத்த ஆசாரியர்கள், பாணதிபாதா வேரமணி சிக்காப்பதஞ் சாமாதியாமி, என்று சீலம் விதித்ததுதகுதியாமா?

## கௌதமபுத்தர் பன்றியிறைச்சியும் சாப்பிட்டார்

பிறக்குங் காலத்தே தாய்மாரைப் பீறிக்கொண்டு தோன்றுதல் அவருணர்ச்சியா லன்று, தெரியாமையால் எனின், † துஷித லோக வாசியாகிய பிரபாபாலரென்னும் போதிசத்துவரென்பவரே துடித விமானத்தினின்றும் வந்து மாயாதேவி வயிற்றிற் புகுந்து பிறந்தார் என்று நீலகேசி மொக்கலவாதச் சருக்கத்தும், போதிசத்து வாவதான கல்பலதை என்னும் புத்தமட நூலினும் கூறப்பட்டுளதே. போதிசத்துவர் எப்படிப்பட்ட அறிவினையுடையவர். அவர் மாயாதேவியின் வயிற்றுக்குட் புகுந்தமையினாலே அறிவை யிழத்தற்குக் காரண மென்னை? ஆகலால் அதுவும் பொருந்தாத கதையாம். நிற்க,

கௌதமபுத்தரும் சீடர்களும் ஓடு கையிற்கொண்டு வீடுகடோறும் யாசித்து விலாப்புடைக்க உண்டது புத்தநூல்களில் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. பிச்சையிடுவோர் எதனையிடினும் புசித்தார். மற்சம், ஆட்டிறைச்சி, மற்றை மிருக இறைச்சிகள் எல்லாம் புசித்தார். பாவா என்னும் நகரத்திலே சுண்டன் என்னுங் கட்டான் பன்றியிறைச்சியுடன் சாதம்போட, அவற்றை ஆவலுடன் தின்று அசீரணம் பிறந்து வயிறுகழிந்து வாந்தியும் பேதியும் தொடங்கின. அப்போது எதுவும் நிலையுள்ளதன்று என்று பிரசங்கித்தாராம். சாகிற இறுதிக்காலத்திலே அப்பிரசங்கத்தைச் செய்தமையால் அதற்குமுன், எல்லாம் நிலையுள்ளனவென்று அவர் எண்ணியிருந்தார் போலும். மலந்தின்னும் பன்றியிறைச்சி ஆ ஆ என்ன ஞானத்தையுண்டுபண்ணிற்று. பாரீர் பாரீர். புத்தர்கள் ஒவ்வொருவரும் தாந்தாம் ஒரு உயிரைக் கொலைசெய்யார்களாம். வேறொருவன் கொலை செய்து இறைச்சிகொடுத்தால் உண்பார்களாம். மிருகங்கள் பறவைகள் தாமாகச் செத்துவிடின் அவற்றைப் பற்களாற் கடித்து உரித்துண்பார்களாம். இவையென்ன நியாயமோ தெரிந்திலேம். * பிறனொருவன் கொன்றால் அவ்விறைச்சி கரும்புபோல் இருப்பதும், தான் கொன்றால் அது வேம்பாயிருப்பதும் வியப்பினும் வியப்பே. "கொன்றிடும்பாவம் தின்றிடத் தீரும்" என்பர். இது மூடமதி யென்பது

† புத்தர் கொள்கைப்படி உலகங்கள் அருவப்பிரமலோகம், உருவப்பிரமலோகம், தேவலோகம், பாவலோகம் என நால்வகையாய் முப்பத்தொன்றும் என்க. அவற்றுள் துஷிதலோகம் என்பது தேவலோகம் ஆறினுளொன்று இவ்வுலகங்கள் தியானத்திற் றேறினோர் அடைதற்குரிய லோகம் என்று இருப்பவும், கௌதமர் செத்தபின்னர் உளன், இலன், உளனிலன் என்பதை அறிக்காமல் விட்டது அறியாமையோ.

எவர்க்கும் விளங்காமற் போகாது. இறைச்சி முதலியன உண்பவர்
இல்லையாயின் கொலை செய்பவரும் இலர். ஆகலால் உண்பவரே கொ
லைப்பாவத்திற்குக் காரணராவர். கொல்லுவோரைப் பார்க்கினும் உண்
பவர்க்கே பாவம் அதிகம் என்பது நியாயமும் பெரியோர் கருத்து
மாகும். "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான்-எங்ஙன
மாளுமருள்" என்று திருவள்ளுவநாயனாரும் கூறியுள்ளாரே. செய்தல்
செய்வித்தல் என்னும் இரண்டற்கும் நன்மை தீமையுண்டு. கௌதம
புத்தர் முதலிய புத்தசுவாமிகள் என்று வந்தவர் யாவரும் தாய்வயிறு
கிழித்துப் பிறந்து அவளைக் கொன்றும், பன்றியிறைச்சி, பூனையிறை
ச்சி முதலிய இறைச்சிகளைப் புசித்துக் கொலை செய்வித்தும் இரு
வகைப் பாவத்திற்கும் ஆளானார். அப்பாவங்களுக்காக அவரடைந்த
தண்டனை யென்னே? இன்னன நியாயங்களாலே புத்தாசிரியர்களே
முதலாஞ் சீலத்தைமீறிப் பெருங்கொடும் பாவஞ் செய்தாராகலின்
அவர் கடவுளுமாகார். உண்மையுணர்ந்தோரு மாகாரெனக.

## இரண்டாவது சீல மறுப்பு.

முதலாவது சீலத்தின் றன்மை யிவ்வாறாக, இரண்டாவது சீலத்
தையாவது கைக்கொண்டு நடந்தாரா கௌதமர். இல்லை, இல்லை.
இரண்டாவது சீலம் என்னெனில் அதின்ன தானாவேரமணி — என்
பது. அதன் உண்மையான பொருள் என்னெனில் "பிறர்பொருளை
ஆசைகொண்டு அபகரித்தல் ஆகாது என்பது. களவுகூடாது என்ற
தே அதன் பொருளென இப்போதுள்ள புத்தர் கூறுகின்றனர். எல்
லாம் சூனியமென்னும் புத்தர்கள் பொருளொன்று இருப்பதாக
வும், அபகரிப்பதாகவும் சீலமேற்படுத்தியது எத்தன்மைத் தென்பது
அறிவுடையோர்க்கு இனிது விளங்கும். களவுகூடாதென்னிற் கௌ
தமபுத்தர் களவாக மனைவிட்டுத் துறவுகொள்வேனென்றோடலாமா?
அது களவாகாதா? பிறர்பொருளை யாசையுற்று அபகரித்தல்கூடாது
என்ற கௌதமபுத்தரே, பிம்பசாரன் வேணுவனத்திற்கட்டிய மாளி
கையை வாங்கினர். அது ஆசையின்றிப் பெற்றுக் கொண்டதோ?
கோசலதேசத்தில் ராப்தியென்று சொல்லப்படும் அசிரவதியென்னும்
நதிக்கரையிலுள்ள சிராவத்திநகரத்திலே சேதன் என்னும் அரசனால்
கட்டப்பட்ட சேதவனவிகாரம் என்னுமாளிகையை அநாதபிண்டக
னென்ற பிரபு மூலமாகத் தமதாக்கிக்கொண்டாரென்று ஜப்பான்
தேசப் பௌத்த நூல்கள் கூறுகின்றனவே. சிராவஸ்தி நகரத்தின்கண்
இருந்த விசாகையென்பாளை மயக்கித் தாம் வசித்தற்கு ஒரு சோலை
யையும் மாளிகையும் அபகரித்துக்கொண்டாரோ. பெருந்துறவு கொ

ண்ட அவர்க்குச் சோலையும் மாளிகையும் எதற்காக? அங்ஙனம் அவ ற்றை யிச்சித்தலும் கவர்தலும், அவற்றில் வசித்தலும் அறவாகுமா? நமது ஞானிகளாகிய அறவொழுக்கநின்றோர் "உண்டுறங்கப் புறந்திண் ணையுண்டு" எனவும், "மணிமாட மாளிகை மேடை வந்தமேதோர் வாழ்வுமோர் இந்திரசாலக் கோலம்" எனவும் துறந்து நின்றனரே. இனி இவர் சங்கத்தார் என்னும் சேவக சந்நியாசிருள் ஒருவனும், கௌதம புத்தருடைய பரமார்த்த சீடனாயிருந்த மௌத்கல்யாயனன் என்பவன் அவரது பிச்சைப்யோட்டினை இருமுறை களவாடிச் சென்ற தாகப் புத்த நூல்களிற் கூறப்பட்டனவே. பிச்சைப்யோட்டைத் திருடி யவன் வேறெதைத்தான் திருட மாட்டான். வைசாலி நகரத்திருந்த ஆம்ரபாலியென்னும் வேசியைத் தம்வழிப்படுத்தி அவளுடைய மாஞ் சோலையைக் கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறநந்தமுள. இங்ஙனம் புத்தரும் சங்கத்தவர்களும் பிறர்பொருள்களை ஆசையுற்றுக் கவர்ந்து களவாடியும் நின்றாராகச் சீலம் யாருக்கு வேண்டுமோ?

## மூன்றாஞ் சீல திக்காரம்.

### அதர்வது புத்தக்கடவுள் கழுதையாகிப் புணர்ந்தது.

புத்தசுவாமிகள் காமாசை யாகாது என்று கற்பனை செய்துவிட் டுத் தாமே மீறிக் காமாசை கொண்டார்கள். காமாசை கொண்டா லும் என்செய்யலாம். நம்மைப்போன்ற பசுக்களாகிய அவர்க்கு அது இயல்பாகவுள்ளதென்று விட்டுவிடுவேர். அவ்வாறு காமாசைதோன்று மேல் முறையாக ஒரு பெண்ணை விவாகஞ்செய்து அவளுடன் அநுப வித்துத் தீர்த்தல் முறை. அதைவிடுத்துப் பிறபெண்களுடன் புணர் ச்சிசெயின் மகா பாவம். அப்படிச் செய்தும் அடங்காமல் காமாசை மீறிக் கழுதையோடு புணர்ச்சி செய்தால் அவனை யெத்தன்மைய ரென்று கொள்வது. அவனைக் கடவுளென்னலாமா? தருமோபதே சஞ்செய்பவரென்னலாமா? மனுடரென்று கொள்ளற்கும் இடமின் றே. அற்ப அறிவினையுடைய பறவைகள் மிருகங்கள் தாமும் தம்மி னத்தைவிட்டு வேறோரினத்துடன் புணரக் கண்டிலமே. காகம் காகத் துடனன்றித் தன்போன்ற குயிலுடன் புணராதே. பசுக்கள் எருதுக ளுட னிணங்குவதன்றி எருதைப்போன்ற எருமைக்கடாவுடனிணை யாதே? இங்ஙனமிருப்பவும் புத்ததேவர் மனைவி, வேற்றுப்பெண்கள் என்னுமிவருடன் புணர்ந்தார் என்பதே வருந்தத்தக்க செய்கையா கும். கழுதையுடன் சேர்ந்தார் என்று கேட்ட யாவர்தாம் இரங்கிப் பரிதாபப்படார். இதனாலே புத்தாசாரியர்களை யாம் இகழவந்தே மென்று புத்த நண்பர்கள் வருந்தற்க. இத்துணைக் காமாசையினாலே

வருந்திக் கழுதையுடன் கூடி மகிழ்ந்தானைக் கடவுள் என்று நம்பி வாணாளை வீணாளாகக் கழிக்கலாமா என்பது காட்டி உய்விக்கவந்தேமென்க. கழுதையுடன் சேர்ந்தானைப் பார்க்கினும் பெண்நாயுடன் சேர்ந்தோன் விசேடித்தவன். அவனைக்காட்டிலும் மானுடப்பெண்களுடன் இயைந்தொழுகும் தூர்த்தர் விசேடித்தவர். அவரைப் பார்க்கினும் அக்கினி சாட்சியாக விவாகஞ்செய்த மனைவியுடன் இருப்பார் மேலானவர். அவரினும் கற்புடை மங்கையுடன் ஒழுகி வாழ்வோரோ ஆப்தராவார். இவர்கள் யாவரும் புத்தரைப் பார்க்கினும் விசேடித்தவரெனினும் கடவுளெனப்படுவாரோ? இங்ஙனம் புத்தர் பெருந்துறவு கொண்டேமென்று பறையடித்து வாலைப் புணர்ச்சிசெய்யின் அன்னவர் செய்கை புலி பசுத்தோலைப் போர்த்தாற் போன்றதன்றே. துறவுபூண்டோன் மகளிரை யிச்சித்தாலே மாபாதகம் வந்துசேரும். புணருவானாயின் அவனுடலில் எத்தனை யுரோமங்களுண்டோ அத்தனை கோடி கற்பகாலம் இரௌரவம் முதலிய நரகங்களில் வீழ்ந்து வருந்துவன் என்பது உண்மைநூல்களின் கிடக்கை. கர்த்தபப்புணர்ச்சிசெய்யுமிவர்க்குரிய நரகஆட்சி கணித்தற்குங் கூடியதோ?

ஆண்கழுதையுடன் பெண்கழுதை வடிவெடுத்துப் புணர்ந்தார் என்று புத்தநூல்கள் கூறியபடியாற்றான், இங்ஙனம் உரைக்கவந்தேம். இல்லாத பொய்யை யுரைத்துப் பாவந்தேட வந்தேமல்லேம். அல்லது அந்நியமதத்தார் சொன்னவற்றைக்கொண்டு சொல்லுகிலேம். புத்தநூலார் புத்தர் பெண்கழுதையாகிப் புணர்ந்தமையென்றும் பெருங்குற்றமேயென்று முழங்கினர். புத்தநூலாகிய சீவக சிந்தாமணியிலே இவ்விடயங் கூறப்பட்டுளது. அது வருமாறு:—

நாமகளிலம்பகம்-௧௮௩ செய்யுள்.

காமமே கன்றிநின்ற கழுதைகண் டருளினாலே
வாமனார் சென்றுகூடி வருந்தினீ ரென்றவையத்
ஈமஞ்சேர் மாலைபோல விழித்திடப் பட்டதன்றே
நாமவேற் றடக்கைவேந்தே நாமிது தெளியினென்றார்.

(இதனுரை) வேந்தே நாமிக்காமத்தைத் தெரியின் காமமேயடிபட்டுநின்ற ஆண்கழுதையைக்கண்டு புத்தனார் பெண்கழுதையாய்ச் சென்றுகூடி இக்காமத்தாலே வருந்தினீரோவென்ன அது ஈமத்துமாலைபோல இழித்திடப்பட்டதல்லவோவென்றானென்க. இது நச்சினார்க்கினியருரை. ஆகலால் கழுதையைப் புணர்ந்தோர் கடவுளாகார். அன்றியும் கௌதமபுத்தர் பத்தொன்பதாம் வயதிலே கல்யாணஞ்செய்ய ஆசைப்பட்டு, காட்டப்பட்ட மங்கையர் பலருள் மிக்க அழகுடையவ

ளான சுப்பிரபுத்தன் மகளாம் யசோதரையைக் கல்யாணஞ்செய்து, வேறொன்றையும் அறியாது அவளுடன் பலகாலம் முயங்கி மயங்கிக் கிடந்து இராகுலன் என்னும் புத்திரனைப் பெற்றாரென்று யசோதர காவியத்தாலும், புத்தசரித்திரத்தாலும் அறிகின்றோம். துறவுபூண்ட பின்னரும் எத்தனையோ மங்கையரைப் பிட்சுணிகளாக்கித் தம்முடன் கூட வைத்திருந்தார். ஆம்ரபாலியென்னும் வேசியுஞ்சங்கத்திலிருந்த தாகத் தெரிகிறது. அங்ஙனமிருந்தாருள் சிஞ்சையென்பவள் தன்னைக் கௌதமபுத்தர் கற்பழித்தாரென்றும், பெண்களையெல்லாம் சங்கத்திற்சேர்த்தது தாமும் தம்மைச் சார்ந்தாரும் மன்மதசுகம் வாய்த்தற்கென்றும் பழிதூற்றினளென்று புத்த சரித்திரம் புகல்கின்றதே. கௌசாம்பி நகரத்திலும் பெண்களைச்சேர்த்தமை காரணமாக மௌத்கலியென்பவன் கொல்லத் தொடங்கியபோது பயந்து, பாரிலேயகம் என்னுங்காட்டிற் புத்தர் பயந்தொளித்தாரென்று தெரிகின்றது. இப்படியுள்ளவரா மாரனை வென்றவர்? பஞ்சேந்திரியங்களைத் தாரையாக விட்டவர்? அகளங்கமூர்த்தியெனப்பட்டவர்? நன்று, நன்று. இவற்றாலே மூன்றாவது சீலந்தையுங் கௌதமபுத்தர் மிகக்கழுதையாகப் புணர்ந்து காமத்தி லாழ்ந்து நின்றமையாற் கடவுளல்லர் என்பது காட்டப்பட்டது.

### புத்தர் பொய்யுஞ் சொன்னார்.

கௌதமபுத்தர் பொய்சொன்னமை அவர் சரிதத்தையறிந்தார்க்குத் தெரியவரும். சுத்தோதனன் என்னுந் தந்தை தன் வீட்டிற்கு வரும்படி அழைப்பித்தகாலை "இராசமாளிகை எனக்குக் கனல் நிறைந்த இடம்போலும், இனிய உணவுகளாக்கும் மடைப்பள்ளி நஞ்சினை புண்ணும் இடம்போலும்" என்று வரமாட்டேம் என்றவர், பின்னர் அழைத்தபோது வருகின்றேம் என்று சென்று நல்ல வுணவுகளையுண்டமை பொய்யொழுக்கேயாம். எல்லாம் பொய் என்று சொன்ன புத்தர் "காசியம்பதியில் ஐந்து சந்நியாசிகளுக்குத் துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம்" என நான்கனைச் சத்தியமென்றதும் பொய்யன்றோ? இதனாலே கௌதமபுத்தர் நான்காவது சீலத்தையுங் கடந்தார் என்பது உணர்த்தப்பட்டது. இதனாலன்றோ எமது குருசுவாமிகளும் திருவருணெறித்தமிழ்வேதத்திலே,

பட்டைத்துவராடைப் படிமங் கொண்டாடு
முட்டைக்கட்டுரை மொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச் சிற்றம்பலம்மேய
நட்டப்பெருமானை நாளுந்தொழுவோமே.

குண்ட மண்டவெர்க் கூறை மூடர்சொற்
பண்ட மாகவை யாத பண்பினர்
விண்ட யங்குசெல் வாயிலார் நஞ்சை
யுண்ட கண்ட ரெம் முச்சியாரே.

என்று, புத்தர் சொல்வன வெல்லாம் பொய்யுரைகள் என்றுகண்டித்தார்.

## பஞ்ச சீலம் பரிநிருவாணந்தரா.

பஞ்ச சீலமாத்திரம் சாக்கிய சங்கத்தார் காட்டியிருக் கின்றனர். அவற்றால் பரிநிருவாண முத்தி வரமாட்டா. எத்தனையோ சீலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அங்ஙன மாகவும் மற்றைய சீலங்களைக்காட்டாது விட்டமை குறையே. அவை எட்டுச் சீலம், தசசீலம், பஞ்சசத்தியாகம், தசசம்யோசனம், சதுர் சதிப் பிரத்தானங்கள், சம்மியக்குபிரதானங்கள், சதுருத்தி பாதங்கள், பஞ்சபலங்கள், சப்த போத்தியங்கங்கள், பஞ்சபாவனை, ஷடபிஞ்ஞை, தசபாரமிதைகள்கூறப்பட்டன. உபசம்பன்னர் என்னும் வகையார்க்கு நூறுசீலங்களும், சுவ விரருக்குக் கோடிசீலங்களும் விதிக்கப்பட்டன. இவற்றைக் கூறும் நூல்கள் தான பாரமிதை, மகாபரிநிருவாண சூத்திரம், தார்மிக சூத்திரம், தர்மபதம் திர்க்கநிகாயம், மத்யம நிகாயம், மகாவர்க்கம், சம்யுத்த நிகாயம், திரிபிடகம், சிருகாலவாத சூத்திரம், சம்யக் திருஷ்டி சூத்திராந்தம் முதலியனவாகும். இவற்றிற் சிறந்த தருமங்க ளெல்லாம் எமது வேதம் சிவாகமம், உபநிடதம், புராணம், போதாயன ஆபத்தம்ப சூத்திரங்கள், தர்ம சாத்திரங்கள், கௌதம தரும சூத்திரம் என்னும் பற்பல நூல்களினின்றும் திருடிப் புத்தர்களாற் சொல்லப் பட்டனவாகும். புத்தரால் நூதனமாகக் கண்டு சொல்லப்பட்டன அல்ல.

## புத்தர் தந்தை சொற் றட்டினவரென்பது.

"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பது ஆன்றோருண்மை இராமபிரானும் பிதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்வான் தமதுஅரசிழந்து வனஞ் சென்றார். பரசுராமரும் தந்தைச் சொல்லை, மந்திர மாகக் கொண்டு தாயை வெறுத்தார். தந்தை சொல்லைத் தட்டினவர் மகா பாவிகள் என்பது பெரியோர் கொள்கை. கௌதம புத்தர், தந்தை துறவெடுக்காதே, வீடுகள் தோறும் பிச்சை யெடுக்காதே என்று பல வகை யிதங்களைக் கூறவும் அவற்றை யெல்லாந் தட்டிநடந்தனர்.

## புத்தர் கடவுள் அல்லர்.

கௌதமபுத்தரும் மற்றைய புத்தர்களும் எம்மைப் போலப் பிறந்தார். தாயைக் கொன்று தாஞ்சீவித்தார். அறியாமையின் மூழ்கி யிருந்தார். நல்ல அழகுடைப் பெண்களை ஆராய்ந்து கல்யாணஞ் செய்

தார். காமசாகரத்துள் முழுகி மன்மத வாதைப்பட்டார். பெண்கமூ
தையாகிப் புணர்ந்தார். வேசிகள், பிறர் மனைவியர் என்றுமிவருடன்
கூடிக்கழித்தார். தாய், தந்தையர், மனைவியர் வருந்தவிட்டுத்தஞ்சுகத்
தைத்தேடி யோடினர். பசியால் அலைந்து வருந்திப் பிச்சையெடுத்து
உண்டார். எம்மைப்போலக் கல்வி பயின்றார், பலகாலம்பட்டினியுற்ற
இளைப்பால் நிற்கமுடியாமல் விழுந்து மூர்ச்சித்தார். 35 - வயது வரை
யும் ஞானம் பெறாமலிருந்தார். புத்தத்துவ மடைந்த பின்னும் பிச்
சையெடுத்துப் பசியைத் தீர்த்தார். பெண்களை யெல்லாஞ் சேர்த்து
வைத்திருந்தார். அவருள் ஒருத்தியாற் பழிதூற்றப் பட்டார். பஞ்ச
சீலங்களையும் விரோதித்து நடந்தார். தாய்க்குந் தந்தைக்கும் அபரக்
கிரியைகள் செய்தார். யசோதரை என்னும் மனைவியால் இகழப்பட்
டார். மாமனால் நிந்திக்கப்பட்டார். அவனை மடித்தார். தாமிருத்தற்
குச் சோலைகளும் மாளிகைகளும் வாங்கியிருந்தார். சீடர்களோடும்
மற்றையோருடனும் பகைத்துக்கொண்டு பயந்து பாரிலேயகப்என்ற
காட்டில் ஒளித்து ஒருகுடிசையில் வசித்தார். சீடரால் அவமதிக்கப்
பட்டார். மௌத்கலி யென்பவனாற் கலகஞ் செய்யப்பட்டார். அங்குலி
மாலன் என்னும் அறலைகள்வனால் அடிக்கப்பட்டார். கிருசாகௌதமி
என்னும் பெண் இறந்த தன்மகனை யெழுப்பித் தருகவென வேண்ட
அதுசெய்யமுடியாமல் என்னென்னவோபோக்குகளைச்சொல்லியனுப்
பினார். அசாத சத்துரு, தேவதத்தன்முதலாயினோரால் துரத்தப்பட்
டார். பெலுவம் என்னுங் கிராமத்தில் மழையால் வருந்திக் குளிர் சுர
முண்டு பட்டுப் படாத பாடெல்லாம் பட்டார். புத்தத்துவம் அடைந்து
நாற்பத்தைந்தாம் வருடம் ஆகியும் மழையால் வருந்திய அவர் பின்
னர் எதனால் வருந்தமாட்டார். ஆட்டு இறைச்சி, பன்றியிறைச்சி,
மீன் இவற்றைப் புசித்தார். தேக அசௌக்கியங் கண்டு குளிர் சோலை
தேடியோடினார். மாரன் என்பவன் இனிச் சாதற்குரியீர் என்னப்பயந்
தார். மாரன் சாகப்போகின்றீர் என்று அறிவித்தும் அறியாது தட்
டானிடம் பன்றியிறைச்சியுஞ் சோறும் உண்டு அசீரணம் பிறந்துபே
தியாகி யலறி யலறி எண்பதாம் வயதிற் செத்தார். இவ்வாறு எம்
போலியரினுங் கேடான நிலைமையி லிருந்த கௌதம புத்தரைக் கட
வுளென்ற சாக்கியர் மதி யிருந்தவாறு பரிதபிக்கத்தக்கதே. கடவுளி
லக்கணம் விரிக்கிற் பெருகும். அதனைநம் சித்தாந்த நூல்களிற் றெற்
றெனக் காண்க. எவர்க்குந் தெரியுமாறு கூறுமிடத்தில் பிறவாத
வன் இறவாதவன் கடவுள். பிறப்பவர் இறப்பவர் பசுக்கள். இது
வொன்றே கடவுளுக்கும் உயிருக்கும் வேறுபாட்டைத் தெரிப்பது.
அங்ஙனமுள்ளகடவுள் சிவபெருமா னொருவரே.

அருணகிரி யந்தாதி.

எல்லார் பிறப்பு மிறப்பு மியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந் தேநஞ் சோணேச-ரில்லிற
பிறந்த கதையுங் கேளேம் பேருலகில் வாழ்ந்தாண்
டிறந்த கதையுங் கேட்டிலேம்.

## புத்தர் நக்கின ரென்பது.

புத்தர்களை நக்கின ரென்று புராணங்கள் கூறின. நக்கினர் என்றால் வஸ்திரம் தரிக்காமல், நிர் வாண முடையரா யிருப்பவர். இவ்வழக்கத்தைப் புத்தர்கள் கொண் டமையால் திகம்பரர் என்றும், அமணர் என்றும் பெயர் பெற்றார். வஸ்திரந் தரித்தால் சீலைப்பேன் மூட்டைப் பூச்சி முதலியன மொய்த்து நாச மடையும் என்ற கருத்தால் அதனை யுடுக்காமல் இருந்தார்கள். இப்போதுள்ள புத்தர்களோ ஒன்று போதாமல் ஏழெட்டு வஸ்திரங்களைத் தரித்துக் கொளகின்றனர், தென்னிந்திய சாக்கிய சங்கத்தாரே! தியசாபிக் கூட்டத்தரே! நீவிர் ஏன் இவ்வழக்கத்தை யநுசரிக்க வில்லை. அம்மணராக விருந்தால் உலகம் நகைக்கு மென்று பயந்தீரோ? அல்லது ஆபாச மென்று விடுத்தீரோ? இன்னும் பரிநிருவாண காலம் வரவில்லையோ? சீக்கிரம் அம்மணமாகுவிர். அப்போதுலகம் நும்மைச் சரியான புத்தரென்று கொள்ளும். மரம், ஊர் வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு முதலிய வற்றிற்கு மன்றோ கடவுளால் மேற் போர்வை கொடுக்கப் பட்டுளது. முன்னே கௌதம புத்தர் ஆண்பாலாரையும் பெண் பாலாரையும் ஒருங்கு தமது சங்கத்திற் சேர்த்து வைத்தாரே. ஆண்களும் பெண்களும் அமணமாக விருந்தால் துறவு என்னுங் குணம் தோன்றுமோ? மூன்றும் ஐந்தாம் சீலங்கள் நிலைக்குமோ? மன்மதக்கொலுவாய்விடுமன்றோ? சாதாரண உலகரும் பெண்கள் உறுப்புக்கள் காமத்தையீனப் பனவென்றெண்ணியே அவைபிறர்க்குத் தெரியாதபடி மறைத்துவைக்கின்றனர். அலங்கோலம்! அவலக்கணத்தை விடுத்திர். சீலையாற் கொலை நேரிடுமாயின் இறைச்சி அன்ன முதலிய உணவானும், மரவுரியானும், நீர் பருகுவதனானும் கொலைகள் நேரிடாவோ? வஸ்திர மிருக்கக் கூடாதென்பது விதியாயின் அந்தரவாசகம், சங்காடி, உத்தராசங்கம் என்று மூன்று வத்திரங்கள் பௌத்த பிட்சுக்களுக்கு இருக்க வேண்டு மென்ற கௌதம புத்தர் விதி பயனில்லையே. சீலையைத் துறந்து விட்டதனால் எல்லாந் துறந்துபோமோ? வேதசிவாகமங்களாகிய ஆடையால் ஒவ்வொருவரும் தம்மை மூடிக்கொள்க. அது பற்றியே "உடுப்பது நான்கு முழம்" என்று தெய்வப் புலமை ஔவைப்பிராட்டியாருங் கூறியருளினர். "நான்கு" என்றது வேதங்கள் நான்கனையும் சிவாகம

பாதங்கள் நான்கனையும் என்று குறிப்புப் பொருள் கொடுத்தல் காண்க. சாதாரண வஸ்திரங்க ளன்றி வேதசிவாகமங்க ளாகிய இருபுடைவைகளையுந் துறந் திருத்தலாற் புத்தர் நிர்வாணிகள், நக்கினர், திகம்பரர், பாசண்டர், அமணர் எனப் பட்டார்.

## புத்தர் மயிர் பறிப்பது.

புத்தர்கள் சுடுபாறையிற் கிடத்தல், பட்டினி யிருத்தல், மயிற்றோகையால் தெருக்களைப் பெருக்கிக் கொண்டு செல்லுதல், உறி யின்னிவைத்தல், கண்டு முட்டுக் கேட்டு முட்டுக் கூறல் முதலிய தொழில்களைச் செய்வதன்றி மயிர்பிடுங்குகிற வேலை யாகிய பெரிய உத்தியோகத்தையு முடையர். இது பற்றியே இக்காலத்தும் ஒருவன் ஒரு பிரயோசனமுமில்லா வேலைசெய்த காலத்து, "என்னடா! மயிர் பிடுங்குகின்றாயோ? சிரைக்கின்றாயோ? என்று பாமரருஞ் சிறுவர் தாமும் பரிகசிப்பதுண்டு. பிரயோசன மில்லாத மயிர் பிடுங்கு தலாகிய வேலையைப் புத்தர்கள் கைக் கொண்டது பரிதபிக்கத் தக்கதே. துலுக்கர் சுன்னத்துப் பண்ணுவது ஒருவகைக்கு நல்லதென்று நமக்குத் தெரிகின்றது. மயிர் பிடுங்கலால் பற்களுக்கும் கண்களுக்கும் வியாதிதோன்றி யூனைப் பலங் கெட்டு, சீக்கிரத்திற் சாகவேண்டிவருமே. மயிர் பிடுங்கலாலே எத்தனை யெத்தனை புத்தர்கள் தலைகள் வீங்கப்பெற்று வெண்டலைபரா யிறந்தனர். அது முடியாவிட்டால் மயிரரும்ப அரும்பச் சௌரம் பண்ணுவது வழக்கம். அதற்காகவே கௌதம புத்தர் உபாலி யென்னும் பெயருடைய அம்பட்டனைச் சீடராக்கி வைத்தனர். வைத்துமென்? மயிரரும்புமுன் எல்லார்க்கும் ஒருவனாற் செய்தல் கூடுமோ? மயிர் பிடுங்க முடியுமோ? வேறு அம்பட்டரை வைத்துச் செய்தற்கும் பொன் வெள்ளி கிடையா. அதனால் தாமே அவ்வேலையை யெடுத்துக் கொண்டார்கள். அம்பட்டர் எல்லாம் கௌதம புத்தரையும் சங்கத்தாரையும் மிகவும் வைதார்கள். பின்னர்க் கௌதம புத்தர்சங்கத்திற் சேர்ந்த பிட்சுக்கள், ஒவ்வொருவரும் பிச்சையோடு, இடையில் கட்டுங் கச்சை, கந்தைகளைத் தைத்தற்கு ஊசி சௌரம் பண்ணுங் கத்தியுடன் மயிர் பிடுங்குங் கருவி, நீர் வடிகட்டுதற்குத் துணி, திரய வாசம் என்னும் எட்டுப் பொருள் களும் உறியில் வைத்திருக்க வேண்டுமென்று போதித்தார். மயிர் இருக்கிற்பேன்கள் உண்டாகிக் கொலைத் தோஷம் சம்பவிக்குமென்பதே மயிர் பிடுங்குதற்குக் காரணமாம். அவ்வாறாயின் உண்ணும் உணவினால் வயிற்றுட்கிருமிகளும் பாம்பு முண்டாகக் காண்கின்றோம். அவற்றாற்கொலைப்பாவம் நேரிடாதா? பொன் வெள்ளிகளைத் தொடக் கூடாதென்று

கௌதம புத்தர் போதத்தா. பொன் வெள்ளிகளாலே யுண்டாகும் பயன் பலவாகும். வசீகரமும், அழகும், குற்ற நீக்கல் முதலியனவும் பொன் வெள்ளிகட்கு உண்மையானவென்றே இந்தியர்கள் பூஷணஞ் செய்து அணிவர். பிறதேசத்தாரும் அவ்வுண்மை கண்டேயணியத்தொடங்கினர். அவ்வாறாய சுசி பசிமைகளை யுடைய பொன் வெள்ளிகளைத் தொட்டாற் குற்றம் என்னும் புத்தர் அவற்றினும் இழிந்த க்ஷௌரஞ்செய்யும் இரும்புக் கத்திகளைத் தீண்டலாமா? ஊசியைத்தொடல் குற்றமாகாதா? அழுக்குக் கந்தைத் துணிகளையுடுத்தல்குற்றமாகாதா?

## புத்த தார்மீகத்திரட்டு.

ஊதிக்கண் பீளைசாறி யுடையொழிந் துணர்வு மாறித்
தாதுக்கள் கலங்கும் வண்ணந் தலைமயிர் பறிக்கச் சொற்றா
னேதுக்கு ஈய வேண்டாமீந்திடிற் பாவமென்றான்
போதிக்க ணீழன் மன்னும் புண்ணிய மூர்த்தி யெம்மான்.

மயிர் பிடுங்கலாலே தம்முயிர்க்குத் தாமே வருத்தஞ் செய்கின்றவராகின்றார். மிக்க, இம்மயிர் பிடுங்குந் தொழிலை யிப்போதுள்ள புத்தர்கள் கைக்கொள்கின்றாரோ? அவ்வாறாயின் அவரிடம் சௌரக் கத்தியும் சாவணமும் இருக்கவேண்டுமே? புலால் முதலிய புசிக்கின்றாரே. மயிற்றோகை கண்டிலேம். உறி தோளில் தொங்கக்கண்டிலேம். இவர்தாமா பௌத்தர் நன்று! நன்று.

தலைமயிர் பறித்துத் தோகை தனைக்கரம் வகித்துத் தோளி
லலையுறி தூங்க விட்டு வாசுடைக் கந்தை மூன்று
விலையில வாகப் பெற்று வேட்குமோ ரூசி கொண்டு
யலை புனல் வழிப்ப தென்று மகன்றிடா புத்தர்க் கன்றே.

## புத்தர் பிறப்புப் புலப்படுதற் கேது.

சாக்கிய சங்கத்தாரும், இபசாபிக் கூட்டத்தாரும், மணிமேகலைநூலாரும் புத்தர் பிறக்குங் காலத்திலே " ஊமைகளுஞ் செவிடர்களும் சற்குரு என்று பேசிக்கொண்டார். கூனர்கள் நிமிர்ந்து நடந்தார்கள். சப்பாணிகள் குழந்தையைத் தரிசிக்கும்படி நடந்து போனார்கள். என்றுங் கேட்டிராத நாத வொலி யுதித்தது. ஜீவராசிகள் யாவைற்றும் பசியின் துயரந் தோன்றாமல் ஆனந்தித்திருந்தன. மனிதர்களைப்பற்றி வருத்திக் கொண்டிருந்த அசுத்த ஆவிகளும்* புத்திமாறாட்டங்களும் நீங்கி அறிவு தெளிவுற்றார்,, என்றிவ்வாறு பொருந்தாத புளுகுகளெல்லாம் விரித்திருக்கின்றனர். ,, முதல் கோணல் முற்றுங் கோணும்,, என்றபடி புத்தராது தாயாகிய மாயாதேவியே குற்றுயிராய் வருந்திச் சாவக்கிடக்க, சுத்தோதனனும் சேனைகளும் புலம்ப

உலகத்திற் சந்தோஷமுண்டாகுமா? "யதாராஜா ததாப்ரஜா,, என்பது பொய்யா? இவைகளெல்லாம் இவ்வளவு மகிழ்ச்சிக்கடலிற் குளிக்கத் தாயொருத்தியா பாடுபட்டு இறப்பாள். ஆவி என்பது உயிர். உயிர் என்னும் பொருளில்லையே யில்லையென்று புத்தர் சொல்லியிருக்க, இவர் ஆவியென்றது புத்தக் கொள்கை தெரியாமையை விளக்குகின்றது. புத்தர்கள் பிறக்குங் காலத்திலே உலகமெல்லாந் துக்கமய மாகவே விளங்கு மென்பதன்றோ முறை. மாரனுங் காலனும் மாயாதேவியும் சுத்தோதனனும் வருந்த "உலகமெல்லாம் ஆனந்தித்தன,, என்றல் தவறு. மணிமேகலையும் இதனாற் கண்டிக்கப்படும்.

சாக்கிய கூட்டத்தாரின் புத்தக முரண்.

புத்தாகம பாலபோதகத்தில் "கௌதமர், புத்தர் என்னும்பெயரைச் சூட்டுவதற்குமுன் பிறந்தபோது, போதிசத்துவர்" என்று அழைக்கப் பட்டாரென்று, எழுதப்பட் டிருக்கிறது. போதிசத்துவர் என்றது பெயரன்று. துஷிதலோக வாசியாகிய பிரபாபாலர் வந்து கௌதமராகப் பிறந்த வரலாறு தெரியாமல் போதிசத்துவர் என்று எழுதிவிட்டார். பிரபாபாலர் என்பவர் போதிசத்துவர்களுள் ஒருவர். போதி சத்துவராவார் புத்தராகப் பிறத்தற்கு உரியவர். அதனைப்போதி சத்துவ அவதான கல்பலதை என்னும் வட நூலிற் காண்க. அங்ஙனமே தமிழிலும் "புத்தராகுவா ரெண்பினோர் போதிசத்துவ ராகடாம்,, என நீலகேசித் திரட்டுங் கூறிற்று.

சாக்கிய சங்கத்தாரது இரவுபகலற்ற வொளி, புத்தமார்க்கவினாவிடை என்னும் புத்தகங்களிலுள்ள வழுக்களையும் அறியாமைகளையும் மாறுபாடுகளையும் இரண்டாம் பாகத்திற் கண்டித் தொழிப்போம். அவற்றுட் சிலவற்றை யீண்டுத் தருகின்றோம்.

"அசித்தா என்னும் பெரியவர்" என்றார். அசித ரென்னும் முனிவரன்றி அசித்தா என்பவரில்லர். புத்தர் சித்தார்த்தி வருடத்திற் பிறந்தவராகலால் சித்தார்த்தி யெனப் பெயரிடப் பட்டார் என்று வாயில் வந்தவாறு எழுதினார். அவ்வருடத்திற் பிறந்தார் என்பதற்கு ஆதாரமின்று. 161ல் என்று அவர் கூறியபடி பார்க்கினும் துந்துபி வருடமாகுமே. அங்ஙனமாயினும் சித்தார்த்தியர் என்பதன்றி சித்தார்த்தர் எனல் தவறு. சித்தார்த்தர் என்னும் பெயருடைய புத்தர் பத்தொன்பதாவது புத்தராகுவர். அவர்பெயரை யிவர்க்கு வைத்து, சித்தார்த்திவருடம் பிறந்ததனால் வந்ததென்று எழுதுவது மூடத்தன்மையாகும். சித்தார்த்தர் என்னும் சொல்லிற்கு, தந்தையின் விருப்

பத்தை நிறைவேற்றியவன் என்று பொருள் இருத்தலைத் தெரியாத இவரா புத்தமத வெளிச்சம் காட்டவந்தவர். சுத்தோதனன் என்னும் அரசன், புத்தரை யெடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போய் வழிபட்ட காலத்து, பண்டைத்தேவர் விக்கிரகத்தி னின்றுந் தோன்றிச சர்வார்த்த சித்தி யெனப் பெயரிட்டார் என்றும், பெயரிட்டும் கோவுடன் பிறந்தமையால் கௌதமர் என உலகத்தார் கூறினர் என்றுஞ் சொல்லப்பட்டதை யறியாதவர், எந்த மதத்தைத் தான் அறிவர். கௌதமபுத்தர் கல்விகற்கும் காலத்திலே ஆசிரியன் சொல்லிய முறைப்படிப் பாடம்போ லோதினார் என்றது பொய். மித்திரா என்னும் பிராமணர் சாலையிற்றிரு ரென்றும், அவருடன் கூடப் படித்தவன் உதாயி யென்னும் பிராமண னென்றுஞ் சொல்லப்பட் டிருக்கின்றது. பன்னிரண்டு வயதிற்குள் புத்தர் நீதி போதிக்கத் தொடங்கினர் என்றார். இருபத்தொன்பது வயதுவரையும் யசோதரை யென்னும் பெண்ணின் காமவலையி லகப்பட்டு விழித்து, ஆறுவருடம் காடுகளிற்றிரிந்து அராளராம முனிவர் முதலாயினோரிடம் சிவயோகம் பயின்று சித்திவந்தபின், 35 - வயதுக்கு மேற் போதிக்கத் தொடங்கினார் என்று சரித்திர மிருக்கவும் பூராயமே பேசுவது வியப்பே. குதிரைக் காரனைச் சன்னன் என்றது தவறு. சந்தகன் அவனது பெயராம். புத்தர் துறவு "பெருந்துறவு, மகாராஜா துறவு என்று எழுதப் பட்டதென்றார். அவை புத்தர் துறவல்ல அவை சைவ சித்தாந்திக ளுடைய துறவாகும். புத்தர் துறவு திரிபிடகத்தில் மகாபிநிஷ் கிரமண சூத்திரத்திற் சொல்லப்பட்ட தாகும். அரசமரத்தைக் கல்லால மரமென்றது தவறு. இரண்டும் வேறுவே றென்பதை யறிக. தன்னை யடுத்த மாணுக்கர் ஐவர்க்கு ,,காணும்படியான இரு கன்மகளும் அநித்தியமா யிருக்கிற,, தென்பது முதலாகத் தருமநெறி போதித்தாராம். மாணுக்கர் ஐவரை யெதனாற் கண்டார். அவரைக் கண்டதும் பொய்யாமே. போதித்த வாய் பொய்யாகாதோ? மாணுக்கர் ஐவரல்லர். உருவேலா வனத்திற் றவஞ்செய்த கௌண்டினிய குலபுத்திரர், தசபலகாசிபர், பாட்பர், அசுவசித், புத்திரர் என்னும் ஐந்து முனிவர் களுக்குமே போதிக்கத் தொடங்கினர். அவர்கள் புத்தர் கொள்கைகளை யெல்லாங் கண்டிக்க அவமானப் பட்டுக் குசி நகரத்திற்கு ஓடினார்,, என்று உசன புராணம் உரைக்கின்றது. 29-வது வயதிற் றுறவடைய, 21 - வது வயதிற்றுறவடைந்தார் என்றது பிழை. எண்பதாம வயதிலே புத்தர் இறந்தார் என்று பௌத்தநூல்கள் கூறவும் 5-ஆறு கூட்டி 85 வது வயதென்றதனால் வந்தபெருமை யென்னே? செத்தவர் தானே.

"புத்தர் கங்கை யென்னும் பேரியாற்றங்கரைப் பல்லவ நாட்டில் சித்திரபானுவரு மார்கழிமீ 28-வது நாள் செவ்வாய்க்கிழமை பௌர்ணமி திதி, திருவாதிரை நட்சத்திரம், துலா லக்கினத்தில் இறந்தார்," என்று சாக்கிய சங்கத்தார் இரவுபகலற்ற வொளி யென்னும் அந்தசாரச் சுவடியில் எழுதியிருக்கின்றார். பிறந்தவருஷ மாதம் தேதி நாள் பிழைபட்ட போதே இவையும் பிழைபட்டன வென்றே கொள்க. சங்கத்தார் கூறியபதா வுள்ள சித்தார்த்தி வருஷ தொடங்கி யெண்ணினும் 85-வது வயது சுபானுவருஷ மாகும், சித்திரபானுவன்று. சித்திரபானு ஆகுமாயின் 85வருஷ 7மீ 15 நாள் ஆகும். இதனாலும் பிழையே. நாளெடுப்பதில் எந்தச் சோதிடர் உதவிபுரிந்தாரோ அறியோம். அவர் சகா தேவனுக்கும் ஆசிரியராயிருந்தாரோ? புத்தர் செத்தகாலம் ஈசான சகாப்தம் 148வருஷ த்தில் வைகாசி மாதத்தில் பௌர்ணமி விசாக நக்ஷத்திரங் கூடிய தினமென்று பர்மாதேசத்தும், இலங்கையினுமுள்ள பௌத்தநூல்கள் கூறுவதென்னே? துலா லக்கினமாயின் விடியற் காலமாகின்றது. அந்நூல்களில், இரவு இரண்டாஞ் சாமத்தில் என்று கூறப்பட்டுளது. இப்படிப் பொருந்தாதன கூறுவது சிலவிரோத மென்பதைப் பித்தபுத்தர் அறியாததென்னோ? அவர் இறந்த இடம் பேரியாற்றங் கரைப் பல்லவ நாடன்று. குசிநகரத்திலே இரணியவதி யென்னும் ஆற்றின கரையிலே இரட்டைச் சாலமர நடுவிடத்தென்க

### புத்தக் கடவுளர் பலரே.

புத்தக் கடவுளர் ஒருவரல்லர். அளவில்லாதவர் பிறந்தும் இறந்தும் போயினர். இன்னும் அநேகர் பிறந்து இறந்து அழிவார். ஆதிபுத்தர் திருமால். இரண்டாவது புத்தர் நாரதர். மூன்றாவது நான்காவது முதலாக வந்தோர் அசுரர்கள். அதற்கப்பால் அம்பட்டன், அரசர், கோலியர், தட்டார், வேசிகள் முதலாயினோர். கௌதம புத்தர் இருபத் தெட்டாவது புத்தராகப் பிறந்தவர் என்று முன்னமே தெரித்துளோம். இருபத்தெண்மர் பெயர்தான் தெரியவருகின்றது. இறந்த புத்தர் எண்ணிலர் என்பது,

### மணிமேகலையில் 30- வது காதை.

"இறந்த காலத் தெண்ணில் புத்தர்களுஞ்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்த,"

என்று கூறப்பட்டதனாலும் பிறவாற்றானும் நன்கு தெரியும். அன்றியும் கௌதம புத்தர் தம் பிதாவாகிய சுத்தோதனனுக்குச் சொ

ல்லுங் காலத்தே ,, இதற்கு முன்பு பிறந்தவர்களும், இனிப்பிறப்பவர்களுமாகிய புத்தர்களுடைய மரபிற்கு உரியேன்,, என்று உரைத்தமையாலும், அது உறுதியாகும். கௌதம புத்தருக்குப் பின்னர் இனிப் புத்தராகப் பிறப்பவர் மைத்திரேய புத்தர் என்பது, தக்கயாகப் பரணியில் “ சதுரானன்,, என்னும் பாடலின் உரையிற் காண்க. இனிமேற் பிறக்கும் மைத்திரேய புத்தரை மைத்திரேய ஆழ்வாரென்று கூறுவர் நீலகேசித் தெருட்டுரைகாரர். மைத்திரேய ஆழ்வார் வரிற் கௌதம புத்தரைக் கவனிப்பார்களோ? இதுபோதும் இனிமேலும் புத்த மதத்தை யநுசரிப்பவர் கௌதமரைக்கைவிட்டு மைத்திரேய ஆழ்வாரைப் போற்றின் அவரால் நன்மையுண்டாகுமென்றுஞ் சில புத்தர் கூறுகின்றனர்.

## கௌதம புத்தர் வள்ளுவ குலத்தரா?

கௌதமபுத்தர் அரசகுலத்தரென்று ஒப்பி, முன்னொடு பின்முரணி வள்ளுவ குலத்தரென்றதூஉம் பொருந்தவாறு. சாக்கையர் என்று வள்ளுவர்க்குப் பெயரன்றிச் சாக்கியர் என்று பெயரில்லை. புத்தர்க்குச் சாக்கியர் என்றும், வள்ளுவர்க்குச் சாக்கையென்றும் பெயரிருப்பதை “ வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவனென்று மாகும்,, எனவும், “ விரவுசாக்கியனே சைனன் விநாயகன்,, எனவுஞ் சூடாமணி நிகண்டினும் வருவதுணர்க. சாக்கையர், சாக்கியர் என்னுஞ் சொற்பொருட் பேதங்கள் தெரியாது வாயில் வந்த வந்தவாறு எழுதல் நகையன்றோ? “ பெரியபுராணப் பாட்டைத்திருத்தி,, சாக்கையர் குருவின்,, என்றது பக்ஷபாதகம். “ சாக்கியகுருவின்,, என்றிருப்பதைக் கண்களைத்துடைத்துப் பார்த்திடுக. மணிமேகலையும் அவ்வாறே சாக்கியர் என்று சொற்றதைப் புரட்டினர். சாதிகுலம் இல்லாப் புத்தர்க்கு இந்த விசாரமேனோ? அது கிணற்றுத் தவளைகள் நாட்டுவளப்பம் விசாரிப்பது போலும். புத்தர்கள் சாகவிருக்ஷதம் நெருங்கியுள்ள இடத்தில் வசித்தமை பற்றிச் சாக்கியரெனப் பட்டார் என்பது தெரியாமல் சாக்கையர் (வள்ளுவர்) என்று மாறியடிப்பது கல்வியறிவில்லாமையும், சாதியபிமானம் பற்றிய இடர்க்கூற்றுக்களுமாம்.

## திருவள்ளுவ நாயனார் சைவசித்தாந்தியே.

திருவள்ளுவ நாயனார் தம்பெயர்க்கேற்ப வள்ளுவ குலத்தரென்றும், “ ஆதிபகவன் முதற்றே யுலகு,, மலர் மிசை யேகினான், எனக் கூறியருளினமையாலும், புத்த சரணம், தர்ம சரணம், சங்க சரணம் என்னும் புத்த கோட்பாட்டின்படி கடவுள் வாழ்த்து, வான்

சிறப்பு, நீத்தார் பெருமை என்பவற்றை வைத்தமையானும், சாதி வேறுபாடு கூறாமையானும் புத்தர் எனவும், அவர் செய்த நூலாகிய திருக்குறள் புத்த நூலென்றும், ஞானவெட்டி யென்னு நூல் செய்தமையும் அதற்குச் சான்றென்றும், பறையர் (புத்தர்) சிலர் குழறித் திரிவர். அன்னவற்றைச் சில மந்த மதியினரும் ஒப்பிப் புத்தரென்று முழங்குவாராயினர். அவை குழறுபடை யென்பது தொகுத்து வகுப்பாம். "கல்வியிற் றமக்கு ஒருவரு மொப்பாரிலர் என்று இறுமாந்த மதுரைக் கணக்காயன் மகனார் நக்கீரர் முதலாம் கடைச் சங்கப் புலவரது கருவத்தை யடக்கும்படி, சிவாஞ்ஞையினாலே பிரமதேவரே வந்து ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தாரென்று புலவர் புராணம், திருவள்ளுவமாலை, நாயனார் சரித்திரம் முதலியவற்றாற் றெளியப் படலானும், பகவன் பிராமண குலத்தவராகலானும், ஆதி யென்பாளும் பிராமண குலத்திற் பிறந்து வள்ளுவரால் வளர்க்கப் பட்டவளாகலானும், வள்ளுவநாயனாரும் சங்கத்தார் நுமது சாதி சமயம் யாவை யென்று கேட்டகாலை "சாதியிலே தொண்ணூற் றொன்பானுஞ் சாதி சமயத்திற் பதின் மூன்றாஞ் சமயம்" என்று கூறியருளினமையானும், சங்கரசாதி தொண்ணூற் றொன்றும், அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்னும் உத்தம சாதி நான்கும், சிவசரியாவான், சிவகிரியாவான், சிவயோகி என்னும் மூன்றுங் கூடித் தொண்ணூற் றெட்டாகலானும், இவற்றிற் செல்லாப் பேறாய், தொண்ணூற் றொன்பதாம் சாதி சிவஞானவான் என்னுஞ் சாதி யாகலானும், புறச்சமயம் ஆறு, அகச்சமயம் ஆறு என்னும் பன்னிருசமயங்களையும் கடந்து விளங்குவது சைவசித்தாந்த சமயமாகலானும், அதுவே பதின் மூன்றாஞ் சமய மாகலானும், திருவள்ளுவ நாயனார் "சிவஞானி யென்னும் பேறுடைமையும், சைவசித்தாந்தி என்னும் சமயியுமாதல் கண்டு தெளிக. ஞானவெட்டி யென்னும் அஞ்ஞான நூல் அவர் செய்திலார்.

வள்ளுவர் என்பது வண்மையை யுடையவர் என்று பொருளன்றிச் சாதிபற்றிய பெயரன்று. வள்ளுவர் வள்ளுவச் சாதியினராயின் நங்கங்கை குலசிகாமணியெனவே சிங்கர் தம் அருந்தவக் கற்புடைமகளைக் கொடுப்பாரா? அன்றியும் தேவர், மாதாநுபங்கி முதலிய திருநாமங்களும், உத்தர வேதத்தார், நாயனார் என்னும் சிறப்புடைப்பெயர்களும் வள்ளுவ குலத்திற்கும், புத்த மதத்தினர்க்கும் எட்டுணையும் பொருந்தாவாம்.

பகவன் என்பது சிவனுக்கும் பெயர் என "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" எனப் புத்தர்களே கூறினர். அவ

ருள்ளும் சிவனே யதற்கு உரியவன் என்பது தெரிப்பான், அவரை யே "ஈசன்" என முதலிற் கூறினர். பகவன் என்பதற்கு அறுகுணங் களை யுடையவன் என்பது பொருளாகலின் அவற்றை யுடையவர் சிவபெருமா னொருவரே யாகலானும், பிறந்திறந்த புத்தர்க்கு அவை யின்மையானும் "மலர்மிசையேகினான்" என்பதும் "எரியாய தாமரை மேலியங்கினாரு மிடைமருது மேவிய வெம்மீசனாரே" எனத் தேவார முதலியவற்றுட் காணப்படலானும், மற்றைய பெயர்களும் அவ்வாறு பரசிவப் பிரபுவிற்கே சொல்லப்படலானும், ஈசன் ஆயிரநாமங்களுள் பகவன் "என்ற சொல்லை யெடுத்து அதனோடு ஆதி என்னும் பெயரை வைத்துக் கூறினமை, தாய்தந்தையாகிய தெய்வப்போற் றுதலானும், அவ்வாறே அவரது சகோதரியாம் ஔவைப் பிராட்டியாரும் "அன்னை யும் பிதாவு முன்னறி தெய்வம்" என இயம்பினமையானும் "இவ் வாறிய போற்று" தாயின் வயிற்றைக் கிழித்துப் பிறக்கும் புத்தர்க்கு ஓரணுத் துணையும் பொருந்தா தென்க.

திருக்குறளில் "மழித்தலு நீட்டலும்" என்பதனால் புத்தர்கள் மயிர் பிடுங்குதலும், க்ஷௌரம் செய்துகொள்ளலும் கண்டிக்கப் பட்டன. "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும்-இல்வாழ்வா னென்பான் றுணை" "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்பன முதலியவற் றால் துறவறமே சிறந்தது, இல்லறம் பரிநிருவாண முத்திக்குத் தடை யானது, துக்கசாகர மாயுள்ளது என்னும் புத்தர் கொள்கைகள் மறுக் கப்பட்டன. "உடுக்கை யிழந்தவன் கைபோல" என்னுந் திருக்குற ளால் அமணராக (நிருவாணமாக) இருத்தல் கூடா தென்றார். புத்தர்க் குச் சாதி, வேதம், ஆன்மா, கடவுள், ஐம்பூதம், புலான்மறுத்தல், வே ள்வி, தவம் முதலாயின உடன்பாடல்ல. நாயனார் அவைகளை யுண்மையா கக்கொண்டனர். அது "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப் பான்-பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" "மறைமொழி காட்டி விடும்" "அகல் விசும் புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி" "தன்னூன் பெ ருக்கற்குத் தான் பிறிதூனுண்பா - னெங்ஙன மாளுமருள்" "மன நல மன்னுயிர்க் காக்கம்" புட்பறந்தற்றே யுடம்போ டுயிரிடைநட்பு "உடம்பினுட் டுச்சி லிருந்த வுயிர்க்கு" அந்தணர் நூற்கு மறத்திற் குமாதியாய் - நின்றது மன்னவன் செங்கோல் "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றே - யுயிர் செகுத்துண்ணாமை நன்று" என வரூஉந் தி ருக் குறள்களாற் பெறப்படும். இவரது திருக்குறள் "அறிவுலா, நெஞ் சுவிடுதூது, திருக்களிற்றுப் படியார் முதலாய சைவ சித்தாந்த நூல்க ளிற் காட்டப் படுதலானும், "ஔவையாரும்" தேவர் குறளுந் திரு

நான் மறை முடிவு-மூவர் தமிழ் முனிமொழியும்-கோவை, திருவாசக முந் திருமூலர் சொல்லு-மொருவாசக மென்றுணர்" என்றமையாலும் பிற ஏதுக்கள் பலவாற்றானும் திருவள்ளுவ நாயனார் புத்தர் அல்லர் சைவ சித்தாந்தியேயாம்.

### சிவனடியார் தூஷண நிராகரணம்.

இங்ஙனமே ஔவையாரும் புத்தசமயி யல்லர். "உடுப்பது நான்கு முழம்" என்றதனால் புத்தர் கொள்ளும் திருவோடைக் கோலங் கண்டிக் கப்பட்டது. புத்தசமயி யாயின் "சிவாய நமவென்று" குலத்தளவே யாகுங்குணம், "மாண்டார் வருவரோ" என்பது முதலாகக் கூறிய தும், கணபதி பூசை புரிந்ததும், திருக்கயிலை யடைந்ததும், தாம் செய்த நூல்களிற் சிவகுமார ரான யானைமுக விநாயகக் கடவுளைக் காப்பாகக் கூறியதும், "தெய்வ மிகழேல், சிவத்தைப் பேணிற் றவத் திற்கழகு" என்றதும் புத்தமத கண்டன மாகுமே. முக்கிய மாகப் புத்தர்கள் இரந்துண்ணுந் தொழிலே புள்ளவர். அதனைத் தமது சகோதரராகிய திருவள்ளுவநாயனார் "இரந்து முயிர் வாழ்தல் வேண் டிற் பரந்து-கெடுக வுலகியற்றியான்" என்னுஞ் செய்யுள் முதலிய வற்றான், இரவு, இரவச்சம் என்னும் அதிகாரங்களைத் தமறுத்தாற் போல, "ஏற்ப திகழ்ச்சி" என்று கண்டித்தனரே. இங்ஙனமே சிவ வாக்கியர், திருமூலநாயனார், பட்டினத்துப் பிள்ளையார், தாயுமான சுவாமிகள் முதலாய பற்பல ஆன்றோர்கள் புத்தமதத்தைக் கண்டித் துத் தாம் அநுட்டிக்கும் சுத்தாத்துவித சைவசித்தாந்த வுண்மையை விளக்கி யிருக்கவும் அவர்களையெல்லாம் புத்தர்க ளெனவும், அவர்கள் செய்த நூல்களைப் புத்தநூல்க ளெனவும் நாணமின்றி யெழுதிய பா றைப்புத்தர் பெரும்பாவத்திற் காளாவ ரென்பது திண்ணம். சமயா சாரியர்களுள் ஒருவரான ஸ்ரீமத் மாணிக்க வாசக சுவாமிகள் இலங் கையிலுள்ள புத்தனுடன் வாதித்து, அவனையும் அவனது குழூஉக்க ளையும் ஊமைகளாக்கி, ஊமையாயிருந்த பௌத்தப் பெண்ணைப் பேசு வித்ததும், திருவாதவூரடிகள் புராணத்திலும், திருவாசகத்திலும் குன்றின்மேலிட்ட விளக்காகவும்,

திருவாசகம்-திருத்தோணோக்கத்தில்,

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்வனவே தவமாக்கு
மத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ.

என்று புத்த மதக் கண்டன மிருப்பவும் சாங்கிய முனிவ னென்பதும், திருவாசகத்தைத் திரிவாசகம் எனவும் திருமந்திரத்தைத் திரிமந்திரம் எனவும் கூறுவதும் மாபெரும் பாவமாம்.

### புத்த மதத்தைப் பற்றி

## ஆங்கிலேய அறிவாளிகளின் அபிப்பிராயம்.

பலவகை மதங்களையும் ஆராய்ந்து உண்மை கண்டலையே தொழிலாகக்கொண்ட ஐரோப்பிய அறிஞருட் சிறந்த, மாக்ஸ் முல்லர், ஒல்டன் பர்க், மானியர் வில்லியம்ஸ் என்னும் வித்வசனர்கள் அபிப்பிராயத்தை நோக்குங்கால், புத்தமதம் திருட்டு மதம் என்று ஏற்படும். மாக்ஸ் முல்லர் அவர்கள், வெளிப்படுத்திவரும் சேக்ரெட் புக்ஸ் ஆப் தி ஈஸ்ட், என்னும் புத்தகங்களுள் பதினைந்தாம் புத்தகத்துள் 52—பக்கத்திற் சொல்லியதாவது-என் அறிவிற் றோன்றியபடி உபநிடதங்களே புத்த மதத்திற்கு மூலம் ஆக இருக்கின்றன. புத்தமதம் உபநிடதங்களை யெவ்வளவு எடுத்துச் செலுத்த வேண்டுமோ அவ்வளவு கவர்ந்து பலவாற்றினுஞ் செலுத்திற்று. அவ்வுபநிடதங்களின் கொள்கைகள் பலவற்றையே தனக்குரிய கோட்பாடாக வுடையது. ஆராய்ந்தறியுமிடத்துப் பௌத்த மதத்திற்குள்ள ஆதாரங்கள் யாவும் கௌதம புத்தர் காலத்திற்கும் முன்னரே யிருந்தனவாகத் தெரிகின்றன. கௌதம புத்தர் போதித்த துறவொழுக்கங்க ளியாவும் உபநிடதங்களுள் ஆரண்ய பாகத்திலிருந் தெடுக்கப் பட்டனவாகும். மற்றையர் கருத்து மிங்ஙனே யுள்ளன வெண்க. ரைஸ் டேவிட்ஸ் என்பவரும் இவ்வாறே கூறியுள்ளார். கௌதம புத்தர் சொன்னவற்றுள் முக்கியமான சிலபாகங்கள் எமது பிருகதாரணிய கோபநிடதத்திற் கூறப்பட்டன. ஸ்மிருதி சாரம், கௌதம தரும சூத்திரம், போதாயன தரும சூத்திரம் என்பவற்றி னின்றும் கௌதம புத்தர் எடுத்துத் தமக்கு இணங்க இணைத்துக் கொண்டனவேயன்றி வேறல்ல. புதிதாகச் செய்தது ஒன்று மில்லை யென்பதாம்.

### புத்தருக்குக் கோயில் விக்கிரகம் விரத முதலியன உள்ளனவென்பது.

கௌதம புத்தர் செத்ததின்பின் சந்தன முதலிய கட்டைகளால் தைலமுதலியன வார்த்துத் தகனஞ் செய்யப்பட்டார். கௌதமரும் தாய் தந்தையர்க்கு அபரக்கிரியைகள் செய்தனர். கௌதமர் எலும்பில் எரியாதன வற்றை எட்டுப் பாகமாக்கிக் கோயில் கட்டி வழிபட்டார்கள். அந்த எட்டுக் கோயில்களுக்கும் சுவர்ண கரக தாது கோபம் என்று பெயர். புத்தருடலின் சாம்பலைப் புதைத்துக் கோயில்கட்டி வழிபட்டார். அதற்குப் பஸ்ம தாது கோபம் என்று பெயர். புத்தர்

அரசமரத்திற் கடைந்த மணி கொடுத்துச் செபிக்கச் சொன்னமை யால் செபமணி கொண்டு மந்திரஞ் செபித்துவந்தனர். பிம்பசாரன் முதலிய புத்தர்கள் அவரைப் போல விக்கிரகம் ஒன்று செய்வித்துக் கிருத்திர கூடத்தில் தாபித்துப் பூசை செய்துவந்தனர். கௌதம புத்தர்க்கு மாயாதேவி யொரு மந்தார மலரைக் கொடுத்தமையால் ஆலயங்களிலுள்ள புத்த விக்கிரகங் களுக்குப் பூச்சாத்தும் வழக்கம் வரலாயிற்று. தேவதத்தனாலும் ஓர் மந்திரவாதியாலும் கோயில் களிலே செயகண்டி, கொடி, பேரிமுதலியன ஒலித்தலும் பிடித்தலும் ஆகிய வழக்கங்க ளேற்பட்டன. சங்கத்திலே திரிபிடகங்களுள் ஒன்றாகிய விநய பிடகம் படிக்கும்போது யாவரும் போய்க் கேட்கவேண்டு மென்பது விதியாம். கோயிலிற் புத்தன் இறந்த வைகாசி மாதத்திலே உற்சவஞ் செய்வதுஞ் சொல்லப்பட்டுளது. அட்டமி, பௌர்ணிமை, அமாவாசி என்னுந் திதிகளிற் பட்டினி யிருத்தல் வேண்டும். மாதத்தில் இருமுறை விரதம் இருத்தல் வேண்டும். சைத்தியம் என்னும் ஆலயங்கள் பலவுள. புத்த விக்கிரகங்களோ பலவுள. அரசமரத்தைத்தொழவேண்டும். அரசமரம் மாத்திரம தலைமண்டை யையும், செருப்புகளையும் குடைகளையும் வைத்துப் புத்தனைப் பாவித்து வணங்கவேண்டுமென்று நீலகேசித்தெருட்டு என்னும் புத்தநூல்கூறுகின்றது. பிச்சையெடுக்கும் புத்தசங்கத் தாருள் பெண்களுக்கு யாதேனுங் குற்றநேரிட்டால் அதற்குப் பிராயச்சித்தம் புத்தர் கோயிலின் முற்றத்திற்கு மணல் சுமந்து கொட்டுதல். ஆடவர்க்குக் குற்றம் வந்ததாயின் கோயில் நந்தவனத்திற்கு நீரிறைத்தலாம். இவ்வாறு கோயில், விக்கிரகம், பூசை, உபசாரம், உற்சவம், விரதம் இவைகள் புத்தமதத்தார் முன்னர்த் தொடங்கிச் செய்துவரல் வழக்கமாயிருக்க, இப்போது கிளம்பிய இப்புத்தர்கள், சைவர்களது விக்கிரகம் கோயில் பூசை, விரத முதலியவற்றை யிழிப்பது அறியாமையும் கொடும்பாவமுமாம். சைவர்கள் புத்தர்களைப் போலப் பாதரட்சை, செருப்பு, குடை, தலைமண்டை முதலியன வற்றைக் கடவுளென்று பூசிப்பதில்லையே. இவர் பாவமிருந்தவாறென்னே?

## விவேசனம்.

இன்னும் அளவிலாக்குற்றங்களுள. அவைக ளெலாம் சாதாரணமானோர்க்குந் தெரியுந் தகையவாகி, புத்த சங்கத்தாரது அறியாமைகளையும், பொய் யொழுக்கங் களையும் காட்டி நிற்றலின் விடுத்தாம். இலக்கிய இலக்கணப் பயிற்சி தானும் இல்லாதவர் எழுதினால் அந்நூலிற் பிழைகள் சொல்லவு முடியுமோ? மணற் சோற்றிற் கல்லாராய்

தல் போதும். பௌத்தர்கள் யாவரும் பறையர் எனப்படுவர். அவர் இந்தியாவிலே மிகக் கேவலமான வகுப்பார். முன்னர்ப் புத்தர்கள் பாறையிற் கிடத்தலாற் பாறையர் என வழங்கப்பட்டார். பாறையர் என்பது இக்காலத்துப் பறையர் என வழக்காயிற்று. இப்பாறையர்களைப் பார்த்தலும் மகாதோஷம். இவர்களே சண்டாளர், நீசர், புலையர் எனப்படுவா. புத்தர்களெல்லாம் பறையர் எனப்படுவாரன்றி வள்ளுவர் என்னுஞ் சாதியாகார். வள்ளுவர் என்னும்சாதியார் ஒருகாலும் பௌத்தராகார். அவர்கள் சைவர்களாய், சிவனொருவரே பரமபதியென்று வழிபட்டு விபூதி ருத்திராக்கங்களை யணிந்து விளங்குவோர். திருநாளைப்போவார் நாயனார் முதலினோர் வள்ளுவ குலத்தவரே. அக்குலத்தார் அநேகர் உளர். அவரே நிமித்திகர் எனப்படுவர். இதனையறிந்த பௌத்தப் பறையர்கள் தாமும் வள்ளுவராக வேண்டுமென்று விரும்பிச் சாக்கையர் என்று வள்ளுவர்க்கு ஒருபெயர் இருத்தலால், சாக்கிய மதத்தார் தாங்கள் என்று கிளமபிப் புத்தமதமாகிய பித்தமதத்தைப் பிதற்றுகின்றார். உயரவுயரப் பறந்தாலும ஊர்க்குருவி பருந்தாகுமா பௌத்தப்பறையர் சைவவள்ளுவ ராவாரா? ஆகலால் புததமதத்தை விடுத்து வள்ளுவராகிச் சிவபெருமானை வழிபட்டுய்யும் பொருட்டே யீதெழுதப்பட்டது. ஏனையன இரண்டாம் பாகமாக வரும்.

## புத்தமதகண்டனம்

முற்றிற்று.

மெய்கண்ட தேவன் மிளிர் கழல் வாழ்க.